Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 098 | வியாழக்கிழமை | மாசி 20 ஆம் நாள் 04 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## மேலும் மூவருக்கு வடக்கில் தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணத்தில் மேலும் 3 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்றுப் புதன்கிழமை உறுதிப்

19 ➤



# இரணைதீவை புதைகுழியாக்காதீர்!

## மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

கிளிநொச்சி, மார்ச் 4

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை தமது பிரதேசத்தில் அடக்கம் செய்யும் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைதீவு மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். நேற்றுக் காலை 9 மணியளவில் இரணைமாதா நகர் இறங்குதுறையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

19 ➤

குடும்பத் தகராறு காரணமாக விபரீதம்

## மூன்று பிள்ளைகளுடன் கிணற்றில் குதித்த தாய்

- தாயார் உயிருடன் மீட்பு
- ஒரு பிள்ளையின் சடலம் மீட்பு
- இரு பிள்ளைகள் மாயம்

19 ➤



## மைதானத்தை மாற்றியது மக்கள் பிரதிநிதிகள்தான்!

### யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

"மைதானங்களின் வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தில் வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட மைதானத்தை

19 ➤

## ஜனாஸா அடக்கத்துக்கு குப்பியாவத்தை பொருத்தம்

### பரிந்துரைத்தது பேராதனை

கொழும்பு, மார்ச் 4

தெமட்டகொட - குப்பியாவத்தை மயானம் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்குத் தகுந்த

19 ➤

## அம்பிகைக்கு ஆதரவாக மட்டக்களப்பிலும் போர்!

மட்டக்களப்பு, மார்ச் 4

இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி மட்டக்களப்பிலும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை

19 ➤

## முஸ்லிம்களின் பரிந்துரைகளை உடன் நடைமுறைப்படுத்துக

### இரணைதீவுப் போராட்டத்தில் பங்குத்தந்தை பத்திநாதர் வலியுறுத்து

கிளிநொச்சி, மார்ச் 4

முஸ்லிம்கள் எமது சகோதரர்கள். அவர்களை நாம் வெறுக்கவில்லை. கொரோனாவால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்கு சில இடங்களை அவர்கள் பரிந்துரைத்திருந்தார்கள். அரசு அதனைப் புறமொதுக்கி இரணைதீவைத் தெரிவு செய்துள்

19 ➤

## வவு. இளைஞர்கள் மீது இராணுவத்தினர் சூடு

### இருவர் காயம்



வவுனியா, மார்ச் 4

வவுனியா ஓமந்தை பகுதியில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இரண்டு பேர் காயமடைந்துள்ளனர். சம்பவம் நேற்று அதிகாலை 4 மணிக்கு இடம்பெற்றுள்ளது. ஓமந்தை காட்டுப்பகுதியில் இருந்து மரங்களைக் கொண்டுசென்ற வாகனத்தை வீதியில் கடமையில் நின்றிருந்த இராணுவத்தினர் மறித்தபோது, வாகனம் நிற்காமல் சென்றதால், அதன் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டபோதே இருவர் காயமடைந்தனர் என்று இராணுவத் தரப்பு தெரிவித்

19 ➤



# உயர் தொழில்நுட்பவியல் நிறுவன காணி வனவளத்திணைக்களத்திடம்

## ஒருங்கிணைப்புக் குழுவில் குற்றச்சாட்டு

**வவுனியா, மார்ச் 4**

**வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் அமைந்துள்ள காணியை வனவளத் திணைக்களம் இதுவரை விடுவிக்கவில்லை என்று அந்த நிறுவனத்தின் அதிகாரி குற்றம்சாட்டியுள்ளார்.**

வவுனியா பிரதேச செயலகத்தின் அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போது கருத்து தெரிவித்த உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் கல்வி இணைப்பாளர் பெ.இளங்குமரன் "எமது நிறுவனம் நீண்ட காலமாகச் செயற்பட்டு வருகின்றது. இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி எமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். எமது கல்லூரி அமைந்துள்ள காணி 2009 ஆம் ஆண்டு எமக்கு வழங்கப்பட்டது. எனினும் வனவளத் திணைக்களத்தின் கீழ் இருந்து இது வரை அது விடுவிக்கப்படவில்லை. இதனால் காணிக்கான உரிமைப் பத்திரம் பெற்றுகொள்ள முடியவில்லை. இது தொடர்பாக உரிய திணைக்களத்துக்கு பிரதேச செயலாளர் ஊடாக 2016ஆம் ஆண்டில் கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் நேரடியாகச் சென்று தெரிவித்தும் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை. காணிக்கான உரிமைப்பத்திரம் இன்மையால் மேலதிகமான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது" என்றார்.

இது தொடர்பாக பிரதேச செயலாளரால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியை வனவளத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் தெரிவித்தார். அத்தோடு எதிர்வரும் பத்து நாள்களுக்குள் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தனக்கு அறிக்கையிடுமாறும் அவர் வனவளத் திணைக்களத்துக்குப் பணித்தார். (ஜ110)

### பயணப்பையில் பெண்ணின் சடலம்:

# கொலை செய்த பொலிஸ் அதிகாரி தூக்கில் தொங்கி உயிர்மாய்ப்பு

கொழும்பு, மார்ச் 4

கொழும்பு டாம் வீதியில் பயணப் பைகளுக்குள்ளிருந்து பெண்ணின் தலையற்ற சடலம் மீட்கப்பட்டுள்ள நிலையில், அவரைக் கொலைசெய்தார் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்ட பொலிஸ் அலுவலர், கடிதம் எழுதி வைத்துவிட்டு தூக்கில் தொங்கி உயிர்மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலம் தொடர்பான விசாரணைகளில், குறித்த பெண் மீது, பாலியல் குற்றம் எதுவும் பதிவாகவில்லை. எனினும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் 4 நாள்கள் விடுமுறையில் சென்றுள்ளார். இதனால் இந்தக்கொலை திட்டமிட்டே இடம்பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி மாவட்டம் குருவிட்ட பகுதியைச் சேர்ந்த திருமணமாகாத 30 வயதுடைய பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொலைக் குற்றச்சாட்டில் தேடப்பட்டவர், புத்தளம் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் உபபொலிஸ் பரிசோதகர். அவரே, படல்கும்புர 5ஆம் கட்டைப் பகுதியில் நேற்று தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இது தொடர்பில், பொலிஸ் தலைமையகத்தில் கொழும்பு மத்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷாந்த சந்திரசேகர நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த சந்தேகநபர் தங்கியிருந்த விடுதியிலிருந்து ஹங்வெல்ல பஸ் தரிப்பிடத்துக்குச் சென்ற முச்சக்கர வண்டியிலிருந்து குருதி மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.கடந்த முதலாம் திகதி பிற்பகல் குறித்த பயணப்பையில் தலையற்ற பெண்ணொருவரின் சடலம் கண்டறியப்பட்டது. உடலில் தலை அகற்றப்பட்டிருந்ததால் குருதி கசியாமல் இருப்பதற்காக சந்தேகநபரால் மிகவும் சூட்சுமமான முறையில் பொலித்தீன் உறையால் கழுத்து பகுதி மூடப்பட்டு சடலம் பையில் வைக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட பயணப்பையை கொண்டு செல்லும் சந்தேகநபர் கொழும்பில் நடமாடிய பகுதிகளிலுள்ள கடைகள் உள்ளிட்டவற்றிலிருந்து பெறப்பட்ட சி.சி.டி.வி. காணொலிப் பதிவுகள் மூலமாக அவர் பயணித்த பஸ் ஸூம் விசாரணைகளின் மூலமாக அவர் முச்சக்கரவண்டியொன்றில் பயணித்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

கொல்லப்பட்ட பெண் மற்றும் சந்தேகநபர் ஆகிய இருவரும் கடந்த 26 ஆம் திகதி இரவு 10 மணிக்கு ஹங்வெல்லவிலுள்ள விடுதியில் அறையொன்றைப் பதிவுசெய்து அங்கு தங்கியுள்ளனர். மறுநாள் இவர்களிருவரும் விடுதியிலிருந்து வெளியில் சென்று வந்தனர் என்றும் அதன் பின்னர் இருவரும் ஒன்றாக வெளியேறியதை அவதானிக்கவில்லையென்றும் ஹொட்டல் ஊழியர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டது. குறித்த சந்தேகநபர் கடந்த முதலாம் திகதி விடுதியில் தங்கியிருந்த அறைக்கான முழுப் பணத்தையும் செலுத்தி அங்கிருந்து சென்றுள்ளார்.

விடுதிக்கு வரும்போது சந்தேகநபரிடம் காணப்படாத பயணப்பை வெளியில் செல்லும்போது இருந்தமையை சந்தேகத்துடன் தாம் அவதானிக்கவில்லை என்றும் ஹொட்டல் ஊழியர்கள் தெரிவித்தனர்.

குறித்த பெண் சிவனொளிபாதமலை செல்கிறேன் எனக் கூறி வீட்டிலிருந்து வெளியேறிய பின்னர் வீட்டிலுள்ளவர்களைத் தொடர்புகொள்ளவில்லை. தற்கொலை செய்துகொண்ட 52 வயதான சந்தேகநபரின் தொலைபேசியைக் கொண்டு அவர் சென்றுள்ள இடங்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இவரது வசிப்பிடத்தில் பொலிஸார் தீவிர சோதனை நடத்திய போதிலும், அவர் சூட்சுமமாக மறைந்திருந்துவிட்டு, பின்னரே தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இதுவரை பெண்ணின் தலைப் பகுதி மீட்கப்படவில்லை. சந்தேகநபர் முதுகில் மாட்டியிருந்த மற்றொரு பையில் தலை இருந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அந்தப் பை இன்னும் மீட்கப்படவில்லை. இவர்களிருவரும் தங்கியிருந்த விடுதிக்கு சீல் வைக்கப்பட்டு தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த விடுதியில் சி.சி.டி.வி. கமராக்கள் பொருத்தப்படவில்லை என்பதால் அங்கிருந்து முக்கிய ஆதாரங்கள் எவையும் இதுவரையில் கிடைக்கவில்லை. சந்தேகநபர் அவரது மனைவிக்கு எழுதினார் எனக் கூறப்படும் கடிதம் மொனராகலை பொலிஸார் வசமுள்ளது. கடிதத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களும் விசாரணைகளின்போது கவனத்தில் கொள்ளப்படும். தலையை அகற்றுவதற்காகப் பயன்படுத்தியிருக்கக்கூடிய ஆயுதம் அல்லது அவ்வாறான விடயங்கள் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன. என்றார். (த-இ)

# ஓட்டோ சாரதிகளிடம் நூதனக் கொள்ளை!

யாழ்ப்பாணத்தில் முச்சக்கரவண்டிச் சாரதிகளை இலக்கு வைத்து பெண் ஒருவரின் தலைமையில் இடம்பெற்றுவரும் நூதனக் கொள்ளை தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்தகையவர்களிடமிருந்து அவதானமாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இது குறித்து தெரிய வருவதாவது:

யாழ்ப்பாணம் புறநகர் பகுதிகளான காக்கைதீவு, பொம்மைவெளி மற்றும் ஓட்டுமடம் ஆகிய பகுதிகளில் வீதியில் நிற்கும் பெண் ஒருவர் வீதியால் வரும் முச்சக்கர வண்டிகளை மறித்து நகர்ப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என வாடகைக்கு அமர்த்துவார்.

பின்னர் பொம்மைவெளி பகுதியில் தனது உறவினர் வீடு ஒன்று உள்ளது, அங்கு முதலில் சென்று விட்டு நகருக்கு செல்வோம் என்று கூறி பொம்மைவெளி பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அழைத்துச் செல்வார்.

அங்கு சென்றதும் அவர் முதலில் அந்த வீட்டுக்குச் சென்றுவிட்டு, சில நிமிடத்தில் ஏதேனும் காரணம் கூறி முச்சக்கர வண்டிச் சாரதியையும் வீட்டுக்குள் அழைப்பார். சாரதி வீட்டுக்குள் சென்றதும் வீட்டினுள் இருக்கும் இளைஞர்கள், சாரதி அந்த பெண்ணுடன் தவறான நோக்குடன் நடந்து கொள்வதற்கு வீட்டினுள் அத்துமீறி நுழைந்தார் என்று குற்றம்சாட்டி சாரதியை மிரட்டி பணம் பறிப்பர்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவ்வாறு ஒரு முச்சக்கர வண்டிச் சாரதியை வீட்டினுள் அழைத்துச் சென்று அங்கிருந்த இளைஞர்கள் சாரதி மீது தாக்குதல் மேற்கொண்டு அவரது தங்கச் சங்கிலி மற்றும் 60 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் என்பனவற்றைக் கொள்ளையடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் தம்மிடம் இதுவரை எவரும் முறைப்பாடு செய்யவில்லை எனவும், அவ்வாறு முறைப்பாடு செய்யப்படும் பட்சத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-26)

# மீள இயங்கத் தொடங்கியது யாழ். இந்திய 'விசா' மையம்

கொவிட்-19 பெருந்தொற்றுக் காரணமாக கடந்த மார்ச் 13ஆம் திகதி மூடப்பட்ட இல. 145, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய விசா சேவைகளுக்கான விண்ணப்ப மையம், நேற்று புதன்கிழமை தொடக்கம் செயற்படத் தொடங்கியுள்ளது. இந்திய விசா சேவைகளுக்கான விண்ணப்ப மையத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 பெருந்தொற்றுக் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சுற்றுலா விசா தவிர்ந்த ஏனைய அனைத்து வகை விசா விண்ணப்பங்களும் இங்கு ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் இந்த விண்ணப்ப மையத்தில் பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்துவதன் மூலம் தங்களது விசா வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்களை (பாஸ்போட்) தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம். அல்லது எமது (ஐ.வி.எஸ்.) விண்ணப்ப மையத்தில் புதன்கிழமைகளில் அல்லது தூதரகத்திலிருந்து வேலை நாள்களில் மாலை 5 மணிக்கும் 5.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நேரடியாக தமது கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அவசர தேவைகளுக்கான விண்ணப்பதாரர்கள் புதன்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை நேரடியாக யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் விசா விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். இலத்திரனியல் விசா விண்ணப்பம் மற்றும் பல்வேறு வகை விசாக்களுக்கு தேவையான ஆவணங்கள் மேலும் பிற தேவைகள் குறித்த தகவல்களுக்கு துணைத் தூதரகத்தின் இணையத்தளமான cgijaffna.gov.in என்பதில் உள்ள 'விசா' மெனுவைப் பார்வையிடலாம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

## தமிழ் – முஸ்லிம்

# இன முறுகலுக்கு தூபமிடுகின்றதா சிங்கள –பௌத்த பேரினவாத அரசு?

### கேள்வி எழுப்புகிறார் சரவணபவன்



**யாழ்ப்பாணம், மார்ச் 4**

**தமிழ் மற்றும் முஸ்லிம்களின் தனித்துவங்களை அழித்தொழிக்கும் கைங்கரியத்தில் களமிறங்கியுள்ள பௌத்த சிங்கள பேரினவாத கோத்தாபய அரசு, சிறுபான்மை இனங்கள் இரண்டையும் ஒன்றுடன் ஒன்றை மோதவிடும் நோக்குடனேயே, கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை இரணைதீவில் அடக்கம் செய்யும் முடிவை எடுத்துள்ளது.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் அடக்கம் செய்யப்படும் இடமாக இரணைதீவு தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாகத் தமிழர் தரப்பு மட்டுமன்றி, முஸ்லிம்கள் தரப்பிலும் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கொரோனா உயிரிழப்புக்கள் ஆரம்பித்த காலத்திலிருந்து கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலத்தை அடக்கம் செய்வது சுகாதாரத்துக்கு ஆரோக்கியமற்றதெனவும் நிலத்தடி நீர் மூலம் கிருமிகள் தொற்றும் அபாயம் உள்ளது எனவும் கூறி ஜனாஸாக்களும் எரிக்கப்பட்டன. உலகில் உள்ள 180 நாடுகளில் கொரோ னாவால் உயிரிழக்கும் நபர்களின் உடல்களைப் புதைப்பதால் ஏற்படாத ஆபத்து இலங்கையில் மட்டுமே ஏற்பட்டு விடுமென இந்த நிபுணர் குழு விசித்திரமான முடிவை அறிவித்திருந்தது.

இது முஸ்லிம்களின் பாரம்பரிய மத வழிமுறைகள் மீது மேற்கொள்ளப்பட்ட மோசமான ஒடுக்குமுறையெனவே கருதப்பட்டது. அதேவேளையில் தற்சமயம் ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் மனித உரிமைகள் பேரவையில் தாம் முஸ்லிம்கள் மீது இனத்துவேச அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என ஒரு போலித் தோற்றத்தை உருவாக்கவும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானைத் திருப்திப்படுத்தும் முகமாகவும் அடக்கத்துக்கு அனுமதிக்கப்போவதாகவும் அதற்கான இடங்களைத் தெரிவு செய்த பின்பு அனுமதி வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது. தற்சமயம் அதற்காக இரணைதீவு தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தயாரிப்பு வேலைகள் நிறைவு செய்யப்பட்டுவிட்டன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1992ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்த இரணைதீவு மக்கள் போர் முடிந்து பல வருடங்கள் கடந்த பின்பும் அங்கு குடியேறவோ தொழில் செய்யவோ அனுமதிக்கப்படவில்லை. தொடர்ச்சியான பல போராட்டங்கள் நடத்திய பின்னரே அப்பகுதி மக்கள் 2018இல் தங்கள் சொந்த இடத்தில் குடியேற அனுமதிக்கப்பட்டனர். மன்னார் வளைகுடாவின் முக்கிய மீன்பிடி மையமாக இரணைதீவு உள்ளது. அதேவேளையில் வடபகுதி மீனவர்கள் இங்கு வாடியமைத்து கடற்றொழிலில் ஈடுபடுவதுடன் வலைகள் காயவிடுவது கருவாடு உலர விடுவது, ஓய்வெடுப்பது போன்ற அவர்களின் தேவைகளும் அங்கேயே நிறைவு செய்யப்படுகின்றன. இரு நோக்கங்களை இலக்காகக் கொண்டு கொரோனாவால் உயிரிழந்தோரின் உடல்களை இரணைதீவில் அடக்கம் செய்ய அரசால் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கருத வேண்டியுள்ளது. ஒன்று இந்த நடவடிக்கைக்குத் தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பார்களாதலால் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே கசப்புணர்வை உருவாக்கல்.

அடுத்தது, தற்சமயம் ஜெனிவாவில் தமிழ் மக்களுக்கு உரிய நியாயம் கிடைக்க வேண்டுமெனக் கோரி தமிழ் மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவற்றைத் திசை திருப்பி முஸ்லிம்களுக்கு எதிரான போராட்டமாக மாற்றல்.

எனினும் தமிழ், முஸ்லிம் மக்கள் இத்தகைய நயவஞ்சக நடவடிக்கைகளால் ஏமாறத் தயாரில்லை. இலங்கை அரசால் தமிழ், முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் எமது இனத் தனித்துவங்களைச் சிதைக்கும் துர்நோக்கம் கொண்டவை என்பதை நன்றாகவே உணர்ந்து கொண்டுள்ளோம். எனவே கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை இரணைதிவில் அடக்கம் செய்வதை உடனடியாக நிறுத்தும்படி வலியுறுத்துவதுடன் இனமுறுகலை ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்டு அரச தரப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம், என்றுள்ளது. (ஒ)

## ஜனாஸாக்களைப் புதைக்க இரணைதீவு பொருத்தமல்ல

**கூறுகின்றார் அமைச்சர் டக்ளஸ்**

யாழ்ப்பாணம்,மார்ச்.4

“கொரோனாத் தொற்றுக் காரணமாக முஸ்லிம் சகோதரர்கள் உயிரிழப்பார்களாயின், அவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு இரணைதீவு பொருத்தமான இடம் அல்ல” என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இரணைதீவு கடலட்டை ஏற்றுமதிக் கிராமத்தின் ஊடாக வருடந்தோறும் சுமார் 25 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிலையில், ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் தீர்மானம் தேவையற்ற அசௌகரியங்களை ஏற்படுத்தும் என்றார். (ஜ-20)

## இன மோதலுக்கு வழிவகுக்கும் முடிவு!

**ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு**

கொழும்பு, மார்ச் 4

இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தி, தனது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக திட்டமிட்ட அடிப்படையில் அரசு முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய இரணைதீவை தெரிவுசெய்திருக்கலாம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் மேலும் தெரிவித்ததாவது:

இரணைதீவை அரசுதான் தெரிவுசெய்தது. எனவே, இனங்களுக்கிடையில் பிரச்சினையை உருவாக்குவதற்கான திட்டமிட்ட நடவடிக்கையாகக்கூட இது இருக்கலாம்.

இனங்களைப் பிரித்து அரசியல் நடத்துவதே இந்த அரசின் அணுகுமுறை. அவ்வாறான செயற்பாடுகள் ஊடாகவே அரசு தனது இருப்பை தக்கவைத்துக் கொண்டுள் ளது- என்றார். (ஒ.44)

## முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறவே இரணைதீவில் ஜனாஸாக்கள் நல்லடக்கம்

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 4

ஜெனிவாவில், இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் தீர்மானத்தைத் தோற்கடிக்க, முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெற்று தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்கான முயற்சியே இரணைதீவில் ஜனாஸாக்கள் புதைக்கும் விவகாரம் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாஸாக்களைப் புதைப்பு என்பது தொடர்பில் தற்போது எடுக்கப்பட்டுள்ள தீர்மானமானத்தை இரு சிறுபான்மை இனங்களுக்குமிடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் செயற்பாடாகவே பார்க்க வேண்டும்.

இரணைதீவு என்பது கிறிஸ்தவ மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த பிரதேசம். கிளிநொச்சி மாவட்டத்துக்கேயான ஒரு தனித் தீவாகும். இங்கு முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது ஒரு பொருத்தமான விடயமாக அமையாது. முஸ்லிம்கள் தங்களுடைய ஜனாஸாக்களை அடக்கம் செய்ய கொஸ்தாவத்தை பகுதியில் அனுமதி வழங்குமாறு கேட்டிருக்கிறார்கள். ஆனாலும் இரணைதீவு என்ற இடத்திலேயே அடக்கம் செய்யப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பில் தமிழ் மக்களும், இஸ்லாமிய மக்களும் நிதானமாகச் சிந்தித்து செயற்பட வேண்டும். சிறுபான்மை இனங்களின் ஒற்றுமையை சிதைப்பதற்கு இவ்வாறான தீர்மானங்களை அரச தரப்பினர் எடுக்கின்றார்கள்- என்றார் . (ப-6)

### ஜனாஸா நல்லடக்கம்;

## தான்தோன்றித்தனமாகவே செயற்படுகிறது கோத்தா அரசு

### ரெலோ கண்டனம்

வவுனியா,மார்ச் 4

முஸ்லிம் மக்களுடைய ஜனாஸா நல்லடக்கம் பற்றிய விடயத்தில், அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவது போலப் பாசாங்கு காட்டி அதைத் தொடர்ந்தும் நிறைவேற்றாது கேள்விக்குறியாக வைத்திருக்கின்ற அரசின் நிலைப்பாட்டை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

இவ்வாறு ரெலோ அமைப்பு தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

அரசு தாங்கள் நினைத்த இடங்களில் தங்கள் வசதிக்கு ஏற்ப முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் வகையில் அதற்கென இரணைதீவை தெரிவு செய்தமை அடிப்படை மனித உரிமை மீறல் செயலாகும்.

ஏற்கனவே மன்னாரில் நல்லடக்கம் செய்ய முற்பட்டு அது வெற்றி அளிக்காமல் போன நிலைமையிலே மீண்டும் இரணைதீவைத் தேர்ந்தெடுத்திருப்பதை இன முறுகலைத் தோற்றுவிக்கின்ற நடவடிக்கையாகவே நாங்கள் கருதுகிறோம். மேலும் சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தும் நடவடிக்கையே இதுவாகும். அரசு பாசாங்கு செய்வதைவிட சரியான தீர்வை முஸ்லிம் தலைவர்களுடன் கலந்தாலோசித்து முன்னெடுப்பதே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் கொடுக்கும்- என்றுள்ளது. (ப-110)

# தொழிற்சாலைக் கழிவுகளால் சிரமங்களுக்கு மத்தியில் நாம்!

*தீர்வு பெற்றுத்தருமாறு துள்ளுக்குடியிருப்பு கிராம மக்கள் கோரிக்கை*

**மன்னார், மார்ச் 4**

**மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, பேசாலைக்கு அண்மையில் உள்ள துள்ளுக்குடியிருப்பு கிராமத்துக்கு சற்று தொலைவில், பிரதான வீதியை அண்மித்து அமைக்கப்பட்டு கடந்த சில வருடங்களாக இயங்கி வரும் தொழிற்சாலையின் காரணமாக பல்வேறு சூழல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளபோதும், இதுவரை அவற்றுக்கான உரிய தீர்வு கிடைக்கவில்லை என பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குறித்த தொழிற்சாலையால், வளி, நிலம் மற்றும் நீர் என்பவை இப்பகுதியில் பெருமளவில் மாசடைந்து வருகின்றன. இந்த தொழிற்சாலை வீதி ஊடாக பிரதான வீதியில் பயணிக்கின்ற நோயாளர்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட சகலரும் துர்நாற்றம் காரணமாக மூச்சுத்திணறல்,வாந்தி உட்பட பல உபாதைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். குறித்த தொழிற்சாலையால் மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் தொடர்பாக பல வருடங்களாக உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தியும் இதுவரை உரிய தீர்வு எதுவும் கிடைக்கவில்லை.

இவ் விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட சுற்றாடல் அதிகார சபை, வடமாகாண நகர அபிவிருத்தி அதிகார சபை, மன்னார் மாவட்டச் செயலாளர், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மன்னார் பிரதேச செயலாளர் மற்றும் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் கவனத்துக்கு கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் எமது கோரிக்கைகளை கீளியன் குடியிருப்பு பங்கு மேய்ப்புச் சபை ஊடாக நாம் கொண்டு சென்றுள்ளோம்.

எனினும் குறித்த பிரச்சினைக்கு இதுவரை உரிய தீர்வு கிடைக்கவில்லை. மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற உள்ள நிலையில் எமது நலன்களைக் கவனத்திலெடுத்து குறித்த தொழிற்சாலையால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (ந-56)

## ஹிஜாஸ்ஸுக்கு மீண்டும் மறியல்

கொழும்பு,மார்ச் 4

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை மேற்கொண்ட பயங்கரவாதிகளுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்க்கு மீண்டும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை புத்தளம் பிரதேசத்தில் மத்ரசா பாடசாலையொன்றில் தீவிரவாதம் கற்பித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பாடசாலையின் அதிபர் மொஹமட் சகீல்லுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இருவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது. (சு-இ)



## இந்தியாவில் குடியுரிமை கோரும் ஈழத் தமிழர்கள்

சென்னை,மார்ச் 4

இந்தியா தமிழகத்தின் இராமேஸ்வரம் மண்டபம் அகதி முகாமிலுள்ள இலங்கையர்கள் தமக்குக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்திய மத்திய உள்துறை அமைச்சின் தரவுகளுக்கமைய, 58 ஆயிரத்து 843 இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்தில் 108 முகாம்களில் தங்கியுள்ளனர். தமிழக முகாம்களில் இல்லாத அகதிகளாக 34 ஆயிரத்து 135 பேர் தங்கியுள்ளனர்.

மேலும், 54 இலங்கை அகதிகள் ஒடிசாவின் மல்கன்கிரியில் உள்ள அகதி முகாமில் தங்கியுள்ளனர் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை இலங்கையில் இருந்து அகதிகளாக வந்துள்ளவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று ஈழ அகதிகள் பாதுகாப்புக் குழு அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பா.புகழேந்தி கோரிக்கை விடுத்திருந்தார். (சு-இ)

## 'குதிரை ஓடிய' இளைஞன் முல்லையில் மாட்டினார்

முல்லைத்தீவு, மார்ச் 4

நடைபெற்று வரும் சாதாரண தரப் பரீட்சையில் ஆள் மாறாட்டம் செய்த குற்றச்சாட்டில் முல்லைத்தீவில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழ் பாடப் பரீட்சையின் போதே இந்த ஆள் மாறாட்டம் இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு சிலாவத்தை பாடசாலை பரீட்சை நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணுக்கேணி மேற்கு முள்ளியவளையைச் சேர்ந்த பரீட்சை எழுதும் மாணவனுக்கு பதிலாக நெடுங்கேணி வவுனியாவைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவர் ஆள் மாறாட்டம் செய்து பரீட்சை எழுதச் சென்றவேளை, பரீட்சை நிலைய அதிகாரியால் அவர் அடையாளம் காணப்பட்டு, முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ப-19)

## துறைமுக விவகாரம்: சு.கட்சி கடும் எதிர்ப்பு

கொழும்பு,மார்ச் 4

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் முடிவுக்கு, அரச பங்காளிக்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

துறைமுகம் மற்றும் விமான நிலையம் ஆகியவை தேசிய வளங்களாகும். அவற்றை வெளியாருக்கு வழங்குவதை ஏற்கமுடியாது என்று கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். இந்தியாவின் அதானி நிறுவனத்தின் பங்களிப்புடன், இலங்கை துறைமுக அதிகார சபையுடன் இணைந்து, அரச - தனியார் வர்த்தகமாக துறைமுகத்தின் மேற்கு முனையத்தை நிர்மாணித்து அபிவிருத்தி செய்வதற்கு அரசுமுடிவெடுத்துள் ளது. அரசின் இந்த முடிவுக்கு தேசியவாத அமைப்புக்களும், சில தொழிற்சங்கங்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இவ்வாறான தொரு நிலையில் சுதந்திரக் கட்சியும் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அதேவேளை, துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்கும் முடிவுக்கு கடும் எதிர்ப்புகள் வலுத்ததால், அந்தத் திட்டத்தை அரசு கைவிட்டது. இந்த நிலையிலேயே தற்போது மேற்கு முனையத்தை அந்த நிறுவனத்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (சு-44)

# விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்காது விட்டால் எமக்கே ஆபத்து

*அரசுக்கு எச்சரிக்கை*

கொழும்பு, மார்ச் 4

நாடளாவிய ரீதியில் உள்ள விவசாயிகள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளும் விரைவாகத் தீர்க்கப்பட வேண்டும். இல்லாவிடில் எதிர்காலத்தில் எமக்குச் சோறு போடுவதற்கு விவசாயியைத் தேட வேண்டிய நிலைமை ஏற்படும்.

இவ்வாறு தேசிய விவசாய அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நிமல் பியதிஸ்ஸ அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நெல் உற்பத்திச் செலவுக்கு ஏற்ப போதுமான வருமானமின்மை காரணமாக இன்று விவசாயிகள் கடனாளியாகவுள்ளனர். நெற் செய்கைக்காக ஒதுக்கப்பட்ட நிலப்பரப்புக் குறைவடைந்து செல்கின்றது. நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் உற்பத்திக்கேற்ற வருமானமின்மை, நீர்ப்பாசனம் தொடர்பான பிரச்சினைகள், பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் புதுப்பிக்காமை மற்றும் பற்றாக்குறையான கட்டுப்பாட்டு விலை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

2 ஆயிரத்து 500 வரையிலான சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் திறக்க வேண்டும். இவற்றுக்குச் சரியான தீர்வுகளை அரசு எடுக்க வேண்டும்.

உணவுப் பற்றாக்குறைக்கு முகங்கொடுப்பதற்கு, தேசிய ரீதியிலான சகல பிரிவினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தப்பட வேண்டும் - என்றார். (சு-இ)

## ஜனாஸா நெருக்கடிக்குத் தீர்வு; புத்தளம் நகரசபை முன்மாதிரி

புத்தளம்,மார்ச் 4

கொரோனாவால் உயிரிழப்பவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான இடங்களை அரசு தேடிக்கொண்டிருக்கும் நிலையில், புத்தளத்தில் அதற்கான இடத்தை ஒதுக்கித் தருகின்றோம் என்று புத்தளம் நகர சபை முன்வந்துள்ளது.

ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் அதற்கு உரிய இடம் உட்பட அனைத்து ஏற்பாடுகளையும் நகர சபை மூலம் பெற்றுக் கொடுக்கத் தயாராக உள்ளோம் என்று புத்தளம் நகர சபைத் தலைவர் கே.ஏ.பாயிஸ் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தாக்கத்தின் காரணமாக மரணிக்கின்ற முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. அதற்கமைவாக நாம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளோம். இது தொடர்பாக சுகாதார அமைச்சிடம் தெரியப்படுத்துவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நினைப்பதெல்லாம் நடப்பதில்லை

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பர். கூத்தாடிக்கு மட்டுமல்ல, ஆட்சியாளர்களுக்கும் அது கொண்டாட்டமான விடயமே. குறிப்பாக ராஜபக்சக்கள், எப்போதுமே தமது இருப்பைத் தக்கவைக்க, சிறுபான்மையினரிடத்தே வலிந்து, மோதுகைகளை உருவாக்கி, அந்த நெருப்பிலே குளிர்காய்வதை வாடிக்கையாகக் கொண்டவர்கள். அப்படிப்பட்ட ராஜபக்சக்கள் இப்போது ஒரே கல்லில் நான்கு மாங்காய்களை அடிப்பதற்காக, கொரோனாவால் இறக்கும் முஸ்லிம்களின் உடல்களை இரணைதீவில் புதைக்கும் முடிவை எடுத்திருக்கிறார்கள்.

ஏற்கனவே பலமுறை சொன்னதுபோல, உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லாத புதினமாக, 'கொரோனாவால் இறந்தவர்களின் உடலங்களை (ஜனாஸாக்களை) புதைக்கக் கூடாது, எரிக்க மட்டுமே முடியும்' என்றொரு சட்டம் இலங்கையில் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் இதற்கெதிராக முஸ்லிம்கள் தொடர்ந்து போராடினர். சர்வதேச ரீதியாக குறிப்பாக இஸ்லாமிய நாடுகள் பலவும், ஜனாஸாக்களை புதைக்க விடாமல் தடை போடும் இலங்கை அரசு மீது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தன. எனவே அவற்றின் எதிர்ப்பாலும், ஜெனிவா அமர்வாலும் ஜனாஸாக்களை புதைக்க அனுமதிப்பது என்று அரைகுறை மனதோடு அரசாங்கம் அறிவித்தது.

ஆனாலும் 'குடத்துக்கு ஈயம் பூசியது போன்றும் இருக்க வேண்டும், ஆனால் பூசாமலும் விட வேண்டும்' என்பதைப் போல, ஜனாஸா விவகாரத்தில் தொடர்ச்சியாக வெளி வரும் அறிவிப்புக்கள் இருக்கின்றன. அதாவது கொரோனாவால் இனிமேல் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் கிளிநொச்சி, இரணைதீவில் புதைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. இலங்கையில் எத்தனையோ இடங்கள் இருக்க இரணைதீவை ஏன் அரசாங்கம் தேர்ந்தெடுத்தது? முஸ்லிம்களின் மையவாடியில் புதைக்காமல் ஏன் இரணைதீவுக்கு ஜனாஸாக்களை கொண்டு வர வேண்டும்? என்றெல்லாம் கேள்விகள் எழத்தொடங்கின. ஆனால் அரசாங்கத்தின் அறிவிப்பைக் கூர்ந்து நோக்கினால், ஏலவே சொன்னது போன்று அரசாங்கம் இந்த அறிவிப்பினூடாக நான்கு மாங்காய்களை அடிக்க நினைப்பது புரியும்.


முதலாவது, இரணைதீவில் ஜனாஸாக்களை புதைக்கும் முடிவை முஸ்லிம்கள் ஏற்கமாட்டார்கள்.

இரண்டாவது, தமது பகுதியில் கொரோனாவால் உயிரிழந்தோரின் சடலங்கள் புதைக்கப்படுவதை இரணைதீவு மக்கள் விரும்பாமல் எதிர்ப்புக் காட்டுவர்.

மூன்றாவது, இரணைதீவு முற்று முழுதாக கிறிஸ்தவ மத மக்கள் வாழும் பகுதி, அங்கு இஸ்லாமியர்களின் ஜனாஸாக்களை புதைக்க எத்தனிப்பது, மதரீதியான பிளவை உருவாக்கலாம்.

நாலாவது, அரசாங்கம் நினைத்தது போல இப்படி பிரச்சினைகள் வந்தால் ஜனாஸா விவகாரம் தொடர்ந்து இழுபறியில் இருக்கும், இதனால் ஜனாஸாக்களை எரிப்பது தொடரும். ஆனால் அவற்றைப் புதைப்பதற்கான தடையை நாம் விலக்கியும், முஸ்லிம்களே அடக்கம் செய்ய மறுக்கிறார்கள் என்று வெளியுலகுக்கு இலங்கை சொல்லமுடியும்.

இப்படி மிகநுண்ணிய கண்ணிகளை ஒற்றை அறிவிப்பின்மூலம் பின்னியிருக்கிறார்கள் ராஜபக்சக்கள். அவர்கள் நினைத்ததில் நான்கில் எது நடந்தாலும் நன்மை அவர்களுக்கே. ஆனாலும் ராஜபக்சக்கள் எதிர்பார்த்தமாதிரி தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் இந்த விடயத்தில் 'கன்னை 'பிரிந்து நிற்காமல், ஒரே குரலில் போர்க்கொடி தூக்கியமையால், அந்தத் திட்டம் பிசு பிசுக்கத் தொடங்கியிருக்கிறது. இரணைத்தீவில் ஜனாஸாக்களை புதைக்கும் முடிவுக்கு, தமிழ் – முஸ்லிம் அரசியல்வாதிகள் மாத்திரமல்லாமல், மக்களும் ஒன்றிணைந்து எதிர்ப்பைக் காட்டியதோடு, போராடவும் தொடங்கிவிட்டனர். இதனால் ராஜபக்சக்களின் கல் இலக்கைத் தாக்கி, ஒரு மாங்காயைக் கூட வீழ்த்தாமல், அப்படியே திரும்பி வந்து ஆட்சியாளர்களையே தாக்கும் நிலை தோன்றியிருக்கிறது. கெடுவான் கேடு நினைப்பான்.



நன்றி - நாமல் அமரசிங்க

# தமிழ் மக்களுக்காக இந்தியா தீர்மானம் எடுக்க வேண்டும்!

## தமிழ் முற்போக்கு கூட்டணி கோரிக்கை

**கொழும்பு, மார்ச் 4**

**தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு வழி சமைக்கும் வகையில், ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இந்தியா தீர்மானம் எடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 46 ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. எனினும், இலங்கை விவகாரம் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு இதுவரை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் ஜெனிவாத் தொடரில் இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிதிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமாரிடம் வினவினோம். அவர் இந்த விடயம் தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

"இந்தியாவின் தலையீட்டுடன் தமக்கு உறுதியான அரசியல் தீர்வு கிடைக்கும் என்று தமிழ் மக்கள் நம்புகின்றனர். இந்த நிலையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வருகின்றது. ஜெனிவாவிலும் இந்த விடயம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆனால் 13 க்கு அப்பால் செல்வதற்குக் கூட (13 பிளஸ்) தாம் தயார் என்று இந்தியாவுக்கு பல தடவைகள் உறுதிமொழி வழங்கிய இலங்கை அரசு, அதனை நிறைவேற்றுவதில் இழுத்தடிப்புச் செய்கின்றது.

எனவே தமிழர் பக்கம் நின்று இந்தியா முடிவெடுக்க வேண்டும். டில்லி அவ்வாறான தொரு நிலைப்பாட்டுக்கு வரும் என்று உறுதியாக நம்புகின்றோம்" - என்றார். (க-44)

# தொழில்துறை விருத்தியால் நாடு அபிவிருத்தியடையும்

## பிரதமரின் எதிர்பார்ப்பு

**கொழும்பு, மார்ச் 4**

தனியார் துறையை இணைத்து, நாட்டில் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் தொழில்முறை திறன்கள் நிறைந்த சிறந்த நாடு இலங்கை என்ற நிலைமையை உருவாக்குவோம். அதன் மூலம் நாட்டை அபிவிருத்தியடையச்செய்வோம். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திறன் என்பது நபருக்கு நபர் வேறுபடும். சிறு வயதில் பிள்ளைகளின் பல்வேறு திறன்களை நாம் காண்போம். அந்தத் திறன்களை வளர்த்துக் கொள்ள நம் நாட்டில் கல்வி முறைகள் மிகக் குறைவு.

பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் போன்றே பரீட்சையில் சித்தியடையாவிடினும் வாழ்க்கையில் வெற்றி பெற்ற பலர் எமது சமூகத்தில் உள்ளனர்.



தற்போது நாட்டில் இளைஞர்களிடையே தொழில் பயிற்சிக்கான தேவை முன்னெப் போதையும் விட அதிகமாக உள்ளது.

உலகின் முன்னேற்றமான சமுதாயத்துக்கு ஏற்ற தொழில்முறை அறிவைக் கொண்டு இளைஞர்களை மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுக்கும் - என்றார். (க-இ)

# கொடிகாமம் சந்தை பூட்டு; வதந்தியால் மக்கள் அந்தரிப்பு

சாவகச்சேரி மார்ச்4

**கொடிகாமம் சந்தை வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதால் சந்தை மூடப்பட்டுள்ளது என்ற வதந்தியால் நேற்று சந்தைக்கு உற்பத்திப் பொருள்களை கொண்டு செல்லும் உற்பத்தியாளர்கள், நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் பெரும் துன்பங்களை எதிர்கொண்டனர்.**

கொடிகாமம் சந்தை வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, சுகாதாரப் பிரிவினரின் அறிவித்தலின்படி சந்தை மூடப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகின. இதனை அடுத்து குறித்த சந்தைக்கு எமது உற்பத்திப் பொருள்களைக் கொண்டு சென்ற விவசாயிகள், வியாபாரிகள், மற்றும் நுகர்வோர் செய்வதறியாது தடுமாறினர். உற்பத்தியாளர்கள் தமது பொருள்களை சாவகச்சேரி சந்தைக்கு கொண்டு சென்றனர், நுகர்வோரும் சாவகச்சேரிச் சந்தைக்கே சென்று பொருள்களைக் கொள்வனவு செய்தனர். எனினும் கொடிகாமம் இதனை அடுத்து கொடிகாமம் சந்தை வியாபாரிகள் கவலையடைந்தனர். வியாபாரத்தை முன்னெடுக்க முடியாது சிரமப்பட்டனர். இது தொடர்பாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

கொடிகாமம் சந்தையில் கொரோனாத் தொற்றாளர் இனங்காணப்பட்டதையடுத்து சந்தையைத் தூய்மைப்படுத்தும் வகையில் சந்தை தொற்றுநீக்கம் செய்யப்பட்டது. அவ்வேளையில் சந்தைக்குள் நின்றவர்களை வெளியேற்றி தொற்றுநீக்கி விசிறப்பட்டது. அதன் பின்னர் சந்தை வழமை போல இயங்கியது என்றனர். (ப-9)

## கொடிகாமம் சந்தையில் தொற்று நீக்கல்

கொடிகாமம்,மார்ச் 4

கொடிகாமம் பொதுச் சந்தை வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, இச் சந்தை வளாகம் நேற்றுக் காலை தொற்று நீக்கம் செய்யப்பட்டது. அதன்பின்னர் சந்தையில் வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டன.

சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் இணைந்து இந்த தொற்று நீக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட வியாபாரிகள் மட்டும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப் பட்டனர்

ஏனையோருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் இன்று வியாழக்கிழமை மேற்கொள்ளப் படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஜ-159)

## சந்தை வியாபாரிக்குத் தொற்று; எட்டு குடும்பங்களுக்கு தனிமை

சாவகச்சேரி மார்ச்,4.

கொடிகாமம் சந்தையில் மரக்கறி வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவருடன் தொடர்புடையன எனக்கருதப்படும் எட்டுக் குடும்பங்கள், நேற்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை. அதிகாலை 4 மணி தொடக்கம் கொடிகாமம் பொதுச் சந்தை வியாபாரிகளுக்கு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் எழுமாறான பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொண்டனர். இவ்வாறு 64 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகள் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டன. அதில் குறித்த மரக்கறி வியாபாரிக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து குறித்த தொற்றாளருடன் தொடர்புபட்டவர்கள் என இனங்காணப்பட்ட குடமியன், மிருசுவில் வடக்கு, கரம்பகம் மற்றும் தாவளை, இயற்றாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எட்டுக் குடும்பங்கள் நேற்று தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டன. மேலும் அவருடன் தொடர்பைப் பேணியவர்களின் விவரங்கள் சுகாதாரப் பகுதியினரால் திரட்டப்பட்டு வருகின்றன. (ப-9)

# வடக்கில் கடந்த மாதம் 278 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், மார்ச். 4

வடமாகாணத்தில் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் 563 பேரும் பெப்ரவரி மாதத்தில் 278 பேரும் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப் பட்டுள்ளனரென்ன வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,பெப்ரவரி மாதத்தில் யாழ் மாவட்டத்தில் 128 பேரும், மன்னார் மாவட்டத்தில் 85 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 44 பேரும், வவுனியா மாவட்டத்தில் 14 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 பேரும் தொற்றாளர்களாக இனங் காணப் பட்டுள்ளனர். இவர்களில் யாழ் மாவட்டத்தில் யாழ்ப்பாணச் சிறைச்சாலையின் 61 கைதிகள் உள்ளடங்குகின்றனர். வடமாகாணத்தில் பெப்ரவரி மாதத்தில் 16 ஆயிரத்து 427 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் யாழ் போதனா மருத்துவமனையில் 11 ஆயிரத்து 126 பரிசோதனைகளும், யாழ்.மருத்துவ பீடத்தில் 5 ஆயிரத்து 301 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்று ஆரம்பித்த கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் இன்று வரை வடமாகாணத்தில் ஆயிரத்து 89 பேர் தொற்றாளர்களாக இனங் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 349 பேர் யாழ் மாவட்டத்திலும், 376 பேர் வவுனியா மாவட்டத்திலும், 267 பேர் மன்னார் மாவட்டத்திலும், 78 பேர் கிளிநொச்சி மாவட்டத்திலும், 19 பேர் முல்லைத்தீவு மாவட்டத்திலும் தொற்றாளர்களாக இனங் காணப் பட்டுள்ளனர்.

இதுவரை வடமாகாணத்தில் கொரோனாத் தொற்றால் 5 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. அதில் மன்னார் மாவட்டத்தில் 3 இறப்புக்களும், வவுனியா மற்றும் யாழ் மாவட்டத்தில் தலா ஒவ்வொரு இறப்புக்களும் பதிவாகியுள்ளன. வடமாகாணத்தில் 8 ஆயிரத்து 636 சுகாதாரப் பணியாளர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதுடன் தனியார்துறை மருத்துவப் பணியாளர்கள், மருத்துவபீட விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை பொதுமக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## கோட்டைகட்டியகுள வித்தியில் மழை நீர் சேமிக்கும் திட்டம்

முல்லைத்தீவு, மார்ச்4



முல்லைத்தீவு, கோட்டை கட்டியகுளம் மகா வித்தியாலயத்தின் குடிதண்ணீர் பாவனைக்கென நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் மழை நீர் சேமிக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கென 30 ஆயிரம் லீற்றர் மழை நீரைச் சேகரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்தில் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொள்கின்ற பாடசாலைகளில் ஒன்றாக கோட்டைக்கட்டியகுளம் மகா வித்தியாலயம் காணப்படுகிறது. அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போதைய வறட்சி நிலையால் முப்பதுக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் மாணவர்கள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-13)

# பணிக்கு அமர்த்தவில்லையேல் குடும்பங்களாக போராடுவோம்

## வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் கடும் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 4

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நேற்று மூன்றாவது நாளாக வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆளுநரைச் சந்திக்க மறுப்பு தெரிவிக்கப்பட்டதால், நேற்றுப் பகல் வீதி மறியலை முன்னெடுத்த அவர்கள், ஏற்கனவே வழங்கப்பட்ட நியமனத்தின்படி தங்களைப் பணிகளுக்கு அமர்த்தவில்லை யென்றால் தத்தமது குடும்ப உறுப்பினர்களுடன் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று எச்சரிக்கை விடுத்தனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் எடுத்த முயற்சியின் பயனாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர்களாக கடமையாற்றிய சுகாதாரப் பணியாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. எனினும் குறித்த செயற்பாட்டில் முறைகேடு இடம் பெற்றுள்ளது என்று தெரிவித்து பாதிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் குறித்த நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன. இதனால் நிரந்தர நியமனக் கடிதங்கள் கிடைக்கப் பெற்ற சுகாதாரப் பணியாளர்கள் 354 பேர் பாதிக்கப்பட்டனர். இந்த நிலையிலேயே அவர்கள் தமக்கு உரிய தீர்வை வழங்குமாறு கோரி போராட்டத்தை முன்னெடுத்துள்ள னர். நேற்று அவர்களுடைய போராட்டம் மூன்றாவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

"எங்கள் நியமனத்துக்கு முடிவு இல்லையா? நீதி கிடைக்கும்வரை போராடுவோம், நேர்முகத்தேர்வில் தேர்ச்சி பெற்று நிரக்கதியாக நிற்கும் எங்களின் நிலை என்ன?, எமக்கு வழங்கப்பட்ட நியமனத்தின் படி எம்மை மருத்துவமனைகளில் பணியாற்ற அனுமதிக்க வேண்டும், இல்லையேல் நாளை முதல் எங்கள் போராட்டத்தில் எமது குடும்ப உறுப்பினர்களும் இரவு பகல் இன்றி தொடர்ச்சியாக கலந்து கொள்வர்" என சுகாதாரத் தொண்டர்கள் எச்சரித்தனர். (ப-20,26)

# இரணைதீவில் உடல்கள் புதைப்பதை கைவிடவும்

## தமிழர் விடுதலைக் கூட்டணி அழுத்தம்

**யாழ்ப்பாணம், மார்ச் 4**

**கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை இரணைதீவில் அடக்கம் தனது செய்யும் அரசின் தீர்மானத்தைக் கைவிட்டு, அரசு, முஸ்லிம் அமைப்புக்களுடன் கலந்து ஆலோசித்து, பொருத்தமான வேறொரு இடத்தைத் தெரிவு செய்ய வேண்டும்.**

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதா வது:

கொரோனாவால் இறப்பவர்களின் சடலங்களை இரணைதீவில் புதைக்க எடுத்த தீர்மானம் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளவோ, நியாயப்படுத்தவோ முடியாதது. போரால் பெரிதும் பாதிக்கப்பட்டு, தங்களது வாழ்வாதாரத்தை முற்றிலுமாக இழந்துள்ள இரணைதீவு மக்களுக்கு இந்த நடவடிக்கை பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்லாமிய சகோதரர்கள் செறிந்து வாழுகின்ற இடங்களில் வெற்றிடமாக பல ஏக்கர் காணிகள் உள்ளன. அவ்வாறு இருக்கும்போது அரசு அவசரமாக எடுத்த இந்த முடிவு, நாட்டின் இனங்களுக்கான விரிசலை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்துவிடும்.

இரணைதீவு கடல் சூழ்ந்த பகுதி என்பதால், மழைக்காலங்களில் உடல்கள் மேலும் பாதிப்படைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

எனவே இந்தத் தீர்மானத்தை அரசு கைவிட வேண்டும்- என்றுள்ளது. (க-இ)

# சட்டத்துறை மாணவனை தாக்கியவர்கள் கைதாவர்?

கொழும்பு,மார்ச் 4

சட்டத்துறை மாணவன் மிகார குணரத்னவைத் தாக்கினர் என்று கூறப்படுபவர்களை உடன் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி மாணவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பேலியகொட பொலிஸ் நிலைய அதிகாரிகள் குறித்த மாணவன் மீது தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகிறது.

அவர்களை தண்டனை மற்றும் சித்திரவதைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் மத்திய மாகாண முன்னாள் ஆளுநர், ஜனாதிபதி ஆலோசகர் மைத்திரி குணரத்னவின் மகன் மற்றும் சட்டத்தரணி சரித குணரத்னவின் சகோதரர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# நடத்துநர்,சாரதி மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

வவுனியா.மார்ச்.4

வவுனியா நகரில் தனியார் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். சாரதி மற்றும் நடத்துநர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் நபர் ஒருவர் தொலைபேசியை வவுனியாவில் உள்ள தனது நண்பரிடம் கொடுக்குமாறு குறித்த நடத்துநரிடம் வழங்கிச் சென்றுள்ளார்.

பேருந்து வவுனியாவை சென்றடைந்ததும் தொலைபேசியை வழங்கியவரின் நண்பர் நடத்துநரிடமிருந்து தொலைபேசியை வாங்கிச் சென்றுள்ளார்.

பின்னர் அதே தொலைபேசியைத் தருமாறு கூறி மற்றுமொரு பெண் அங்கு சென்றுள்ளார். அப்போது நடத்துநர், ஏற்கனவே தொலைபேசியை கொடுத்து விட்டேன் எனத் தெரிவித்தார்.

அதன் போது அப்பெண்ணுடன் வந்த சில நபர்கள் சாரதி மற்றும் நடத்துநரைத் தாக்கியதுடன், நடத்துநரை முச்சக்கரவண்டியில் ஏற்றிச்சென்று வவுனியா நகரை அண்டிய தோணிக்கல் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் வைத்து தாக்கியுள்ளனர்.

அதன் பின்னர் முச்சக்கரவண்டியில் ஏற்றிச்சென்று மீண்டும் பழைய பேருந்து நிலையத்தில் இறக்கி விட்டு தொலைபேசி கிடைத்து விட்டது, தவறுதலாக நடந்து விட்டது, மன்னித்து விடுங்கள் என்று கூறி விட்டுச் சென்றுள்ளனர்.தாக்குதல் நடத்திய நபர்கள் தொடர்பில் சி.சி.ரி.வி கமராவின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-18)

# பல்கலைக்கழகங்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு

## பிரதமர் அறிவுறுத்து



கொழும்பு,மார்ச் 4

பல்கலைக்கழக மாணவர்களின் கல்விக்காக இதுவரை வழங்கப்படும் நிதிக்கு மேலதிகமாக, கூடுதல் நிதியை கட்டம் கட்டமாக பல்கலைக்கழகங்களுக்கு விடுவிக்குமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். திறைசேரி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுடன் இணைந்து அதற்கான தீர்மானத்தை எடுக்குமாறும் அவர் பணித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அது தொடர்பான பிரதமரின் ஊடகப்பிரிவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த ஆண்டில் 41 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். முதல் முறையாக 10 ஆயிரத்து 588 மாணவர்கள் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். அதற்கமைய பல்கலைக்கழகங்கள் அமைப்பின், பௌதீக மற்றும் மனித வளங்களை நிர்வகிக்கக் கூடுதலாக சுமார் 5 பில்லியன் ரூபா தேவைப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அதற்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்குமாறு பிரதமர் பணித்தார்.

இதேவேளை, 'இசெட்' வெட்டுப்புள்ளி காரணமாக பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாத, சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்காக, ஒரு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் சுட்டிக்காட்டினார். அதற்கான தீர்வாக அரசு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டால், கொத்தலாவல பல்கலைக்கழகத்துக்கு அவர்களை இணைத்துக்கொள்ள முடியும் என்று கொத்தலாவல பல்கலைக்கழக துணைவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் தெரிவித்தார்.

அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு பிரதமர், கல்வி அமைச்சருக்கு அறிவுறுத்தினார்.

கலந்துரையாடலில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினர் மற்றும் அனைத்து பல்கலைக் கழக துணைவேந்தர்கள் கலந்து கொண்டனர் - என்றுள்ளது. (க-இ)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 4

யாழ்ப்பாண மாவட்ட சந்தைகளில் உள்ளூர் உற்பத்திகளின் வருகை அதிகரித்ததை அடுத்து மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் ஏற்பட்ட பெருமழை காரணமாக விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் அங்கு காணப்பட்ட விவசாயப் பயிர்கள் அழிவடைந்தன.

இதனால் கடந்த மாதம் தம்புள்ள சந்தையிலிருந்து. கொண்டுவரப்பட்ட மரக்கறி வகைகளுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டு பெரும்பாலான மரக்கறி வகைகள் கிலோ 400 ரூபாவுக்கு குறையாமல் விற்பனை செய்யப்பட்டன. தற்போது உள்ளூர் உற்பத்தி மரக்கறிகள் பெருமளவில் சந்தைக்கு வருவதனால் தம்புள்ள சந்தையிலிருந்து கொண்டு வரப்படும் மரக்கறி வகைகள் கிலோ 100 ரூபாவுக்கு குறைவாகவும் உள்ளூர் மரக்கறி வகைகள் அதற்கு அதிகமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

இதேவேளை முன்னர் தம்புள்ள சந்தையிலிருந்து மரக்கறி வகைகள் கொண்டு வந்த வியாபாரிகள் தற்போது மாவட்டச் சந்தைகளில் மரக்கறிகள், கொள்வனவு செய்து தம்புள்ள சந்தைக்குக் கொண்டு செல்கின்றனர் என்று உள்ளூர் வியாபாரிகள் தெரிவித்தனர். (ஐ-9)

# போதையில் சாரதிகள்: கண்டறியத் திட்டம்

கொழும்பு,மார்ச் 4

போதைப்பொருள்களைப் பயன்படுத்திய நிலையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை அடையாளம் காணும் விசேட வேலைத்திட்டத்தை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் முன்னெடுக்கவுள்ளது என்று அதன் தலைவர் மருத்துவர் ஷவிந்திர கமகே தெரிவித்துள்ளார்.

கனரக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் மற்றும் பயணிகள் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் ஆகியோர் போதைப்பொருள்களைப் பயன்படுத்திய நிலையில் வாகனங்களைச் செலுத்துகின்றனர் என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனால், பாதசாரிகள் மற்றும் பயணிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு ஏற்ப, தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# புதிய அரசியல் கட்சிகளுக்கான பதிவு நிறைவு

கொழும்பு,மார்ச் 4

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யும் பணிகள் நேற்றுமுன்தினத்துடன் நிறைவடைந்துள்ளன என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் 35 குழுக்கள் விண்ணப்பித்துள்ளன. இந்த விண்ணப்பங்கள் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் பரிசீலனைக் குழுவுக்கு அனுப்பப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர் என்று ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (க-இ)

# பொங்கல் உண்டு; படையல் இல்லை; பங்குனி திங்கள் உற்சவத்துக்கு கட்டுப்பாடு

**சாவகச்சேரி மார்ச்4**
**இந்துக் கோவில்களில், எதிர்வரும் 15 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ள பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள இந்துக் கோவில்களுக்கு சுகாதார முறைகளைப் பின்பற்றி நேர்த்திக் கடன்களைச் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர், கோவில் நிர்வாகத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன்போது தமது நேர்த்திகளைச்செய்ய விரும்பும் அடியார்கள் கோவில் நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு நேர ஒதுக்கீட்டைச் செய்துகொள்ள வேண்டும். அவ்வாறான அடியார்கள் ஒரு மணி நேரம் மட்டுமே கோவில்களில் அனுமதிக்கப்படுவர். அந்த ஒரு மணித்தியாலத்துக்குள் பொங்கி, நேர்த்திகளைச் செய்துவிட்டு வெளியேற வேண்டும். படைப்பதற்கோ, அன்னதானம் வழங்குவதற்கோ அனுமதியில்லை, கோவில் வளாகத்தில் கைகழுவும் வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும். வளாகத்தினுள் செல்வோர் கட்டாயம் சமூக இடைவெளிகளைப் பேண வேண்டும். கோவில் மண்டபத்தினுள், கோவில் வளாகத்தினுள் அவசியமின்றி நடமாடக் கூடாது.

இதேவேளை கோவில் நிர்வாகத்தினர் அடியார்கள் மேற்கொள்ள வேண்டிய நிபந்தனை தொடர்பான அறிவித்தலை கோவில் வளாகத்தில், காட்சிப்படுத்த வேண்டும். இந்த நிபந்தனைகளை கோவில் நிர்வாகத்தினரோ அல்லது நேர்த்தி செய்ய வருபவர்களோ மீறினால் அடுத்துவரும் வாரங்களில் உற்சவம் நடத்த அனுமதி வழங்கப்படமாட்டாது ஆகிய விதிமுறைகளுக்கு அமைவாக பங்குனித் திங்கள் உற்சவத்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ப-9)

# கிழக்கின் அபிவிருத்தி; ஆளுநருடன் கலந்தாய்வு

திருமலை,மார்ச் 4
கிழக்கு மாகாண மக்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர் அநுராதா யாஹம்பத்தை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் கோவிந்தன் கருணாகரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சந்திப்பின் போது மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உரிய வெளிநாட்டு முதலீடுகள், மாவட்டத்தில் இதுவரை தீர்க்கப்படாத பல பிரச்சினைகளை ஆளுநரிடம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறினர்.

குறிப்பாக சட்டவிரோத மண் அகழ்வுப் பிரச்சினைக்கு, விசேட குழு ஒன்றை உடனடியாக அமைத்து, தீர்வு காணுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (க-இ)

# குளத்தைக் காணவில்லை; பொலிஸில் முறைப்பாடு

அம்பாறை, மார்ச் 4
அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலக பிரிவிலுள்ள கஞ்சிக்குடியாறு, தாமரைக்குளக் கண்டத்திலுள்ள காரப்புக்கேணி குளக்கட்டை நபர் ஒருவர்ஜே.சி.பி மூலம் உடைத்ததுடன், குளத்தை மணல் நிரப்பி மூடியுள்ளார் என்று தெரிவித்து பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விவசாயிகள் தம்பிலுவில் கமநல சேவைகள் நிலையத்தில் தெரிவித்ததையடுத்தே குறித்த நபருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது .

சம்பவ இடத்துக்கு திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன், பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் கமநல சேவை நிலைய அதிகாரிகள் ஆகியோர் சென்று பார்வையிட்டுள்ளனர். ஏற்கனவே பிரதேச செயலகத்தால் குறிப்பிட்ட இடத்தில் வேலைகளைச் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

# 2,64,000 தடுப்பூசிகள் அடுத்த வாரம்

கொழும்பு,மார்ச் 4

உலக சுகாதார நிறுவனத்தால் முதற்கட்டமாக 2 லட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கைக்குக் கொண்டு வரப்படும்.

இந்தத் தடுப்பூசிகள் இலங்கைக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார். (க-இ)




# தோட்ட அதிகாரிகள் எதிர்ப்புப் போராட்டம்

ஹற்றன்,மார்ச் 4
பெருந்தோட்டப் பகுதிகளில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி, துரைமார் உட்பட தோட்ட அதிகாரிகள் நேற்று எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் ஒல்டன் தோட்டத்தில் துரையின் வீடு தேடிச் சென்று தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஹற்றன் மல்லியப்புச் சந்தியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொழிலாளர் அராஜகம் ஒழிக, தோட்ட அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக, தோட்டங்களில் அரசியல் மயமாக்கலை நிறுத்து, முகாமைத்துவத்துக்கு எதிரான வன்முறையைக் கண்டிக்கின்றோம் போன்ற பதாதைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். கைகளில் கறுப்புப் பட்டிகளையும் அணித்திருந்தனர்.

தோட்ட அதிகாரிகளின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு, துப்பாக்கிப் பயிற்சி வழங்கி, பாதுகாப்பு நிமித்தம் துப்பாக்கி வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

(க-வ-இ)

# விசா இல்லாத இந்தியர் கைது

புத்தளம்,மார்ச் 4

விசா இன்றி முந்தல் ரஹ்மத் கிராமம் பிரதேசத்தில் தங்கியிருந்த 60 வயதுடைய இந்தியர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

# மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒருங்கிணைப்பு தலைவர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு, பிரதேசஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி குறித்த நியமன விபரத்தை வெளியிட்டுள்ளது.

ஏறாவூர்பற்று, மண்முனைப்பற்று, போரதீவுபற்று மற்றும் மண்முனை தென்மேற்கு ஆகிய பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரனும், கோரளைப்பற்று தெற்கு, கோரளைப்பற்று, கோரளைப்பற்று வடக்கு, மண்முனை வடக்கு, மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று ஆகிய பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தனும், கோரளைப்பற்று மத்தி, கோரளைப்பற்று மேற்கு, ஏறாவூர் நகரம் மற்றும் காத்தான்குடி ஆகிய பிரதேச இணைப்புக் குழுக்களின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட்டும் நியமிக்கப்பட்டுள்ளனர். (க-இ)

வண்ணை. காமாட்சி முன்பள்ளியின்

# பூங்கா திறப்பு நிகழ்வும் கால்கோள் விழாவும்



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காமாட்சி முன்பள்ளியின் பூங்கா திறப்பு நிகழ்வும் புதுமுக மாணவர்களின் கால்கோள் விழாவும் நேற்றுக்காலை நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் தர்சானந் மற்றும் ஆசிரியர் செ.பிரதாப் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். நிகழ்வில் பெற்றோர், மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் உட்பட பலர் பங்கேற்றிருந்தனர்.


முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், முதலாம் தரத்துக்குச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கினார். (த-319)

# குளங்களைச் சீரமைக்கும்போதே கருவேல மரங்களையும் வேரறுங்கள்

## மன்னார் விவசாயிகள் கோரிக்கை

மன்னார், மார்ச் 4

**மன்னாரில் குளங்கள் அபிவிருத்தி செய்யப்படும்போது, குளங்களின் நடுவில் உள்ள பற்றைக் காடுகளையும், கருவேல மரங்களையும் துப்பரவு செய்யுங்கள் என்று உரிய திணைக்கள அதிகாரிகளிடம் மன்னார் விவசாயிகளும் கால்நடை வளர்ப்புப் பண்ணையாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த காலங்களில் அபிவிருத்தி செய்யப்பட்ட குளங்களில் கட்டுகள் மட்டுமே உயர்த்தப்பட்டு நடை பாதைகள் ஆக்கப்பட்டிருந்தன. ஆனால் குளங்களின் நடுவில் காணப்படும் பெரும் பற்றைக் காடுகளும், நீருக்கும் நிலத்துக்கும் கேடு விளைவிக்கும் கருவேல மரங்களும் அகற்றப்படாமல் குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன. இதனால் குளங்களின் நடுவில் காணப்படும் கருவேல மரங்களாலும் பற்றைக் காடுகளாலும் விரைவாக குளங்கள் வறண்டு விடுகின்றன. இந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் 128 குளங்கள் சீரமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இதன்போது குளங்களின் நடுவில் உள்ள பற்றைக் காடுகளையும் கருவேல மரங்களையும் துப்பரவு செய்வதன்மூலமாக அதிக அளவான நீரைத் தேக்கி வைக்க முடியும். இந்த விடயத்தில் நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், விவசாய அமைப்புகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள் விவசாய மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், விவசாய அமைப்புகள் உட்பட அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் -என்றனர். (ப-213)



## ஒருங்கிணைப்பு கூட்டம்; பல விடயங்கள் ஆராய்வு

மன்னார், மார்ச்.4

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கான, இந்த ஆண்டுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் டி.அகிலனது நெறிப்படுத்தலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில், பிரதேசவாரியாக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன. அதில் நீர்ப்பாசனம், சுகாதாரம், விவசாய உற்பத்தி, கல்வி நடவடிக்கைகள், வீதி அபிவிருத்தி, கால்நடை வளர்ப்பு மற்றும் சுரங்கத் தொழில் சம்பந்தமான பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரதேச சபை உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச பதவிநிலை உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். (வ-213)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்.மாநகர பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரை நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு இந்த விசர் நோய்க்கான தடுப்பூசி ஏற்றப்படும். தொடர்ந்து 22ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரைக்கும் வண்ணார்பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படும் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (ந-17)



ஜீவ ஊற்று அன்பின் கரம்' ஊடாக நேற்றுமுன்தினம் ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இருவருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையை நியூசிலாந்தில் வசிக்கும் சந்திரன் மற்றும் நியூசிலாந்து இணைப்பாளர் ரவி ரஜனி குடும்பத்தினர் வழங்கியிருந்தனர். (ச-222)

## மைதானத்துக்கு அடிக்கல் நடுகை

கிளிநொச்சி, மார்ச் 4

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட தர்மங்கேணி கிராமத்தின் பூதவராயர் விளையாட்டுக்கழகத்துக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தர்மங்கேணி கிராமத்தின் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பூதவராயர் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் மற்றும் கிராம மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் (வ-12)

## போரால் பாதிக்கப்பட்ட 392 பேருக்கு கொடுப்பனவு

கிளிநொச்சி,மார்ச் 4

போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 392 பேருக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன்விருத்தி பயிற்சி மையத்தில் அமைந்துள்ள மாநாட்டு மண்டபத்தில், மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

350 பொதுமக்களைக்கான சொத்து இழப்பீட்டுக் கொடுப்பனவும், 25 அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவும், 8 பேருக்கான காயம் அல்லது உயிரிழப்புக் கொடுப்பனவும், 9 கோயில்களுக்கான கொடுப்பனவும் இதன்போது வழங்கப்பட்டன.

நிதி அமைச்சின் கீழ் இயங்கும் இழப்பீட்டு அலுவலகத்தின் ஊடாக 30 மில்லியன் ரூபாவுக்கு மேல் கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 'பிள்ளைத்தமிழ்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 4



புலவர்மணி வை.க.சிற்றம்பலம் எழுதிய 'இணுவில் சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ்' நூல் வெளியீட்டு நிகழ்வு, கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருநெல்வேலி யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக உள்ள கலாநிதி க.சிவராமலிங்கம் பிள்ளை நினைவு அறிவாலய அரங்கில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமை தாங்கினார்.

விரிவுரையாளர் கு.பாலசண்முகன் தமிழ்த்தாய் வாழ்த்து இசைத்தார். தமிழ்ச்சங்க செயலர், விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா வரவேற்புரையாற்றினார்.

அத்துடன் தமிழ்ச் சங்கத் தலைவர் ச.லலீசன் தொடக்கவுரை ஆற்றினார். பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா நூல் பற்றிய நயப்புரையை ஆற்றினார். நிகழ்வில் ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர். (ச)

## மகளிர் தினத்தில் பெண்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பூமணி அம்மா அறக்கட்டளையால் சமூக மட்டத்தில் பணியாற்றும் பெண்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கென யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து இருவர் வீதம் தெரிவு செய்யப்பட்டு மகளிர் தினம் அன்று யாழ்.பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

எனவே நாளை (05ஆம் திகதிக்கு) முன்னர் தகுதியுடையோர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வல்லரசுகளை எதிர்க்கும் குரல் நாடுமுழுவதும் ஒலிக்க வேண்டும்

## அப்போதுதான் சுயநிர்ணய உரிமை சாத்தியம் என்கிறது மார்க்சிச லெனினிசக் கட்சி

**கொழும்பு, மார்ச் 4**

**எந்த வல்லரசும் இலங்கையில் கால் ஊன்ற விடமாட்டோம் என்ற குரல் நாடு முழுவதும் ஓங்கி ஒலிக்கும்போதே தேசிய இனங்களுக்கான சுய நிர்ணய உரிமை சாத்தியமாகும் என்று புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்தக் கட்சி அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

'சுபீட்சத்தின் நோக்கு' என்பது வெறும் பெயர்ப்பலகை மட்டுமே. அதனாலேயே இன்று அந்நிய வல்லரசுகளின் ஆடுகளமாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது.

மக்கள் நீண்டகாலமாக முன்வைக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை, தொல்லியல் மற்றும் வனவளம் ஆகிய பெயர்களில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்புகளை நிறுத்துதல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் நிலங்களை விடுவித்தல், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி ஆகிய நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வை வழங்க வேண்டும். அதேவேளை ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் மத்தியில் தீர்வுக்கான பொதுக் கோரிக்கைகளை முன்வைக்காது நாடாளுமன்ற, மாகாண சபை, மற்றும் பிரதேச சபை ஆகியவற்றின் ஆசனங்களுக்கான வாக்கு வங்கி அரசியலையே தமிழ், முஸ்லிம் மற்றம் மலையகத் தமிழ் அரசியல் தரப்புக்கள் முன்வைத்து வருகின்றன. பெரும் அழிவுகளையும் துன்பங்களையும் அனுபவித்து, இன்றும் அவற்றில் இருந்து முழுமையாக மீண்டு வர முடியாது தவிக்கின்ற தமிழ் மக்களை, ஐ.நா. தீர்வு தரும், ஐரோப்பிய ஒன்றியம் தலையிடும், அமெரிக்கா அதற்கு உதவும், இந்தியாவே எமக்கு இரங்க வேண்டும் என்று தொடர்ச்சியாகப் பிழையான வழிகாட்டுதல்கள் மூலம் ஏமாற்றித் தமது அரசியல் இருப்பைப் பாதுகாத்து வரும் எமது தமிழ்த் தலைவர்கள், தமது எசமானர்களை நோக்கி நீங்களே வந்து வடக்கு கிழக்கில் நிலை கொள்ளுங்கள் என்று கேட்கும் துரோகத்தன அரசியலுக்கு செல்லத் தயாராக இருப்பது விசனத்திற்குரியதாகும்.

இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட எந்த வல்லரசும் இலங்கையில் கால் ஊன்றவும் வளங்களைச் சுரண்டவும், ஆதிக்கம் செலுத்தவும் வேண்டாம் என்ற குரல் தெற்கிலும் வடக்கிலும், மேற்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் ஓங்கி ஒலிக்கும்போதே இலங்கைக்குரிய விடுதலையும் சுதந்திரமும் தேசிய இனங்களுக்கான சுய நிர்ணய உரிமையும் கிடைக்க முடியும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். -என்றுள்ளது. (ப)

*ஜனாஸாக்களை புதைக்க அனுமதி*

# முஸ்லிம் நாடுகளின் ஆதரவுக்கான நாடகம்

## சாடுகிறார் கருணாகரன் எம்.பி.

வவுனியா,மார்ச் 4



ஐக்கிய நாடுகள் மனித வுரிமை பேரவையில், முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறும் நோக்கிலேயே கொவிட் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களது ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்மக்களது இறந்த உடல்களைப் புதைப்பதா அல்லது எரிப்பதா என்கின்ற நீண்ட நாள் விவாதங்கள் ஒரு முடிவுக்கு வந்துள்ளன.

190 க்கும் மேற்பட்ட நாடுகள் கொரோனாவால் இறந்த மக்களின் உடல்களைப் புதைக்கின்றன. இலங்கையில் இது தொடர்பாக நியமிக்கப் பட்ட தொழில்நுட்பக் குழு எரிக்கலாம் அல்லது புதைக்கலாம் என்று அறிக்கை கொடுத்தும் இலங்கை அரசு புதைக்க விடாமல் இருந்தது.

ஐக்கிய நாடுகள் மனித வுரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. இந்தக் காலகட்டத்தில் புதைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளமை முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறும் நோக்கிலேயே. தற்போது அரசு, இறந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கியுள்ளது. அதுவும் வர்த்தமானி அறிவித்தல் வந்த பின்னரும், சுற்று நிருபம் வரும் வரை புதைப்பதப்பதற்கான அனுமதி வழங்கப் படவில்லை- என்றார். (க-18)

# 'சேவிஸ்' நிலைய கழிவு நீரால் குடிதண்ணீர் கிணறுகள் பாதிப்பு!

## நாவற்குழி மக்கள் விசனம்

கொடிகாமம், மார்ச் 4

யாழ்ப்பாணத்தில் உள்ள வாகனச் சுத்திகரிப்பு நிலையம் (சேவிஸ்) ஒன்றிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரை, பவுசர் மூலம் எடுத்துச் சென்று நாவற்குழி பகுதியில் உள்ள காணிகளில் வெளியேற்றுவதால் அந்தப் பகுதியிலுள்ள குடிதண்ணீர் கிணறுகள் மற்றும் நிலங்கள் மாசடையும் அபாய நிலையில் உள்ளன என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண நகரப் பகுதியிலிருக்கும் வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து கழிவு நீரை உரிமையாளர் பவுசர் மூலம் எடுத்துச் சென்று நாவற்குழி மேற்குப் பகுதியில் உள்ள தனது காணி, அயலிலுள்ளவர்களின் காணிகள் மற்றும் பராமரிப்பு இன்றி காணப்படும் கிணறுகள் ஆகியவற்றில் தொடர்ந்து ஆறு மாதகாலமாக தினமும் காலை, மாலை என இரு வேளைகளில் வெளியேற்றி வருகின்றார். இதனால் அந்தப் பகுதிகளில் குடிதண்ணீர் கிணறுகள் மற்றும் நிலங்கள் மாச டைந்து எதிர்வரும் காலங்களில் குடிதண்ணீர் பிரச்சினை ஏற்படும் நிலை காணப்படுகிறது.

பராமரிப்பு இன்றி காணப்படும் கிணற்றினுள் விடப்படும் கழிவு நீரால் கிணற்று நீர் நுரைத்துக் காணப்படுகின்றது. அந்தக் காணிக்கு அருகாமையில் உள்ள காணிக்குள் புதிதாக குடியமரவுள்ள குடும்பங்கள் தமது காணிக்கு அருகாமையில் இந்த கழிவு நீரை வெளியேற்றுவதால் தமது குடியிருப்புக்குள் இருக்கும் குடி தண்ணீர் மற்றும் 700 மீற்றர் தூரத்தில் உள்ள குடிதண்ணீர் கிணறு ஆகியவை மாசடையும் அபாய நிலையில் உள்ளன என விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் விசாரித்தபோது, வாகன சுத்திகரிப்பு நிலைய உரிமையாளர் வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்குரிய சகல அனுமதியும் பெற்று, தண்ணீர் சுத்திகரிப்பதற்குரிய இயந்திரம் பொருத்தப்பட்டு சுற்றுச் சூழல் அதிகாரசபையின் அறிக்கை மற்றும் சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பணிமனையின் அனுமதி பெற்றுள்ளார். இவர் வாகன சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்படும் நீரையே அவ்வாறு வெளியேற்றுகின்றார் என்று தெரிவித்தார். (ற-159)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 4

யாழ்ப்பாணம் மாசியப்பிட்டி சண்டிலிப்பாய் ஜே/144 கிராம அலுவலர் பிரிவு முதியோர் இல்லத்துக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவராக செ. எட்வின் குணரட்னம். செயலாளராக சு.சிறிஸ்வரன், பொருளாளராக தி.தெய்வ ஜோதி, உபதலைவராக அ.அற்புதம், உபசெயலாளராக அ. யோகராஜா, நிர்வாக உறுப்பினர்களாக க.சித்திரவேல், ஆ.சிவசம்பு, ப.அன்னம்மா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-63)

# திருவள்ளுவர் குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 4

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் தமிழ்த்துறையினரின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் குருபூசை நிகழ்வு கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட ஆசிரிய மாணவர் ஒவ்வொருவரும் தமது வாழ்வில் வள்ளுவம் கொண்டுள்ள செல்வாக்குப் பற்றி ஒரு நிமிடக் கருத்துரை வழங்கினர். கலாசாலையின் பிரதிஅதிபர் ச.லலீசன் மாணவரின் கருத்துக்கள் குறித்த தொகுப்புரையையும் விரிவுரையாளர் வேல் நந்தகுமார் நிறைவுரையையும் வழங்கினர். (வ-இ)

# பொலிஸ் நிலையத்தில் அம்புலன்ஸ் வண்டி

## பிரதேச சபை உறுப்பினர் சத்தியசுதர்சன் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச்.4

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் அம்புலன்ஸ் வண்டியை நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சதாசிவம் சத்தியசுதர்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனையின் அம்புலன்ஸ் வண்டி முல்லைத்தீவுக்குச் சென்றாலோ திருத்தப் பணிகளுக்குச் சென்றாலோ ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனைக்குச் செல்லும் அவசர நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந் நிலையில் இலங்கையில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் 1990 அம்புலன்ஸ்வண்டிகள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதைப் போன்று ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திலும் அம்புலன்ஸ் வண்டியொன்றை நிறுத்தி வைப்பதன் மூலம் ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் இலகுவாக முல்லைத்தீவு பொது மருத்துவமனைக்குச் செல்லக் கூடிய நிலைமை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கு பணித்தார். (வ-13)

# மக்களின் வரிப்பணத்துக்கு கட்சிச் சாயம் பூசாதீர்கள்!!

### தேசிய நிகழ்வை அரசியல் இலாபமாக்க முனைந்தோருக்கு சூடுவைத்த தவிசாளர்

**யாழ்ப்பாணம், மார்ச் 4**

**அரசின் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை அரசியல் கட்சி நிகழ்வாக மேற்கொள்வதற்கு ஆளும் கட்சியின் ஒரு தரப்பினர் முனைந்தமையால் வலி. கிழக்கில் குழப்ப நிலை ஏற்பட்டது.**

கிராமப்புற மைதானங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தை நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் காலை 10.25 மணிக்கு ஆரம்பிக்குமாறு விளையாட்டு உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சால் பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் செயற்றிட்டத்துக்காக வலி. கிழக்கு பிரதேசத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. மைதானத்துக்கு அடிக்கல் நடுவதற்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.நிரோஷ் தலைமையில் உறுப்பினர்கள் சென்றனர். அங்கிருந்த யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவர் அங்கஜனின் இணைப்பாளர் என்று அடையாளப்படுத்திக் கொண்டவர், தன்னையே மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் பெயர்ப்பலகையைத் திறக்க அறிவுறுத்தினார் என்றும், மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவர் பின்னர் வந்து அடிக்கல்லை நடுவார் எனவும் தெரிவித்தார். இதனால் அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது. 'அரசால் தீர்மானிக்கப்பட்ட விடயத்தை வேறு எவரும் கையில் எடுக்க முடியாது. இந்தச் செயற்றிட்டம் அமைச்சால் ஒவ்வொரு பிரதேச சபைள் மூலம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. நாட்டில் தெற்கில் ஒரு அபிவிருத்திக்கொள்கையும் வடக்கில் ஒரு கட்சிசார் அபிவிருத்திக்கொள்கையும் இருக்க முடியாது. வரிப்பணம் செலுத்தும் மக்களுக்கு நான் பொறுப்புச்சொல்ல வேண்டும். பிரதேச சபைகளே மேற்படி நிகழ்வை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் தகுதி வாய்ந்த நிறுவனம். வடக்கில் மட்டும் பிறிதொரு நடைமுறை பின்பற்றப்பட முடியாது.

நீங்கள் சபையின் அனுமதியின்றி பதாகை நாட்டுவதற்கு முடியாது. நாங்கள் சட்ட நடவடிக்கை எடுப்போம். அப்போது இதில் இருக்கின்ற அரச உத்தியோகத்தரும் சாட்சியாக அமைவார்' எனத் தெரிவித்து தவிசாளர் தரப்பினர் அங்கிருந்து சென்றனர். (ஒ.ஐ)



## பிரான்ஸ் தூதரக அதிகாரியுடன் யாழ்.மாநகர முதல்வர் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

இலங்கைக்கான பிரான்ஸ் தூதரக அதிகாரி நேற்றுமுன்தினம் யாழ். மாநகர சபை முதல்வரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு யாழ்ப்பாண மாநகர சபையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் இ.ஜெயசீலன் மற்றும் மாநகர சபையின் செயலாளர் அ.சீராளன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-20)



### மாற்றுத் திறனாளிகளுக்கான


## ஆசனத்தில் அடையாளமிடும் பணி பஸ்களில் முன்னெடுப்பு

கிளிநொச்சி, மார்ச் 4

மாந்தை கிழக்கு மாற்றுத் திறனாளிகள் அமைப்பால் வேர்ல்ட் விசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் பஸ்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆசன அடையாளமிடும் வேலைத்திட்டம் நேற்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி முறிகண்டி மற்றும், பரந்தன் பஸ் நிலையங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசன ஒதுக்கீட்டில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு இன்மையால் அதனை அடையாளப்படுத்தும் வகையில் இந்த ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-6)





## பல்கலை வேந்தரின் சிறப்பு கருத்துரை

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவின் ஒரு பாகமாக அமையும் பல்கலைக்கழக வேந்தரின் சிறப்பு கருத்துரை நேற்று முன்தினம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைலாசபதி கலையரங்கில், துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

"பழங்காலப் பதிவுகளும் நிகழ்காலப் பார்வைகளும் மகாவம்சமும் வரலாற்று நூல்களும்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வேந்தர், தகைசார் வரலாற்றுப் பேராசிரியர் எஸ். பத்மநாதன் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்வில், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் எஸ். பாலச்சந்திரன், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச)

## நிர்வாக சபைத் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றன. இதன்போது கௌரவிப்பும் இடம்பெற்றது.

புதிய நிர்வாகத்தின் தலைவராக செ. ஜெயக்குமாரும், உபதலைவராக ந. பாஸ்கரசோதியும், செயலாளராக ந.செல்வச்சந்திரனும், பொருளாளராக சி. ரவிச்சந்திரனும் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாக உறுப்பினர்களாக சி.மயூரதன், க. இலங்கநிதன் சி.அழகானந்தம், தா.இராஜேந்திரம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ப)

## காணிகளை பகிர்ந்தளிக்குமாறு ஜெயபுரம் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச்.4

கிளிநொச்சி ஜெயபுரம் கிராம மக்களுக்கு முதற்கட்டமாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள 130 ஏக்கர் காணியை விரைவாக வழங்க பூநகரி பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜெயபுரம் பொது அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

1983ஆம் ஆண்டு வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஜெயபுரம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது. மேட்டுக் காணிகளில் மக்கள் குடியேறி இருந்தபோதிலும் தேவன் குளத்தின் கீழான 550 ஏக்கர் வரையான வயல் நிலங்களை நாட்டில் நிலவிய போர்ச் சூழலால் ஜெயபுரம் மக்களால் துப்பரவு செய்ய முடியவில்லை. 2009ஆம் ஆண்டின் பின்னர் தமது வயல் நிலங்களை துப்பரவு செய்ய முன்வந்தபோது அந்த நிலங்களில் காணப்படும் மிதிவெடிகளை அகற்றிய பின்னர் துப்பரவு செய்யுமாறு அதிகாரிகள் அறிவித்தனர்.

இந் நிலையில் மிதிவெடிகள் அகற்றப்பட்டவுடன் வயல் நிலங்களை மக்கள் துப்பரவு செய்ய ஆரம்பித்த போது வனவளத் திணைக்களம் குறித்த 550 ஏக்கர் வயல் காணியை உரிமை கோரியது. பின்னர் பல்வேறு தரப்பினரிடம் ஜெயபுரம் கிராம மக்கள் சென்று நேரிலும் மனுக்கள் மூலமும் தமது பிரச்சனைகளை வெளிப்படுத்திய நிலையில் தற்போது முதற்கட்டமாக 130 ஏக்கர் காணியை வனவளத் திணைக்களம் விடுவித்தது. ஆனாலும் பூநகரி பிரதேச செயலகத்தால் அதைப் பகிர்ந்தளிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலையில் 130 ஏக்கர் காணியைப் பகிர்ந்தளித்து தேவன் குளத்தை அபிவிருத்தி செய்யுமாறு ஜெயபுரம் மக்கள் பூநகரி பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை ஜெயபுரம் கிராமத்தில் தற்போது 480 குடும்பங்கள் வாழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-13)



## கொலை வழக்கு; தலைமறைவான சந்தேகநபர் கைது

சாவகச்சேரி,மார்ச் 4

கொலை வழக்குடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர், நீண்ட நாள்களாக தலைமறைவாக இருந்த நிலையில் நேற்றுமுன்தினம் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்திய போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது. கடந்த 2019 ஆம் ஆண்டு கொடிகாமம் பாலாவிப் பகுதியில் முதியவர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டார். (ஐ-9)

# நயவஞ்சக அரசியலையே ராஜபக்ச அரசு முன்னெடுப்பு

## சுட்டிக்காட்டுகிறார் வேலுகுமார் எம்.பி



**கண்டி, மார்ச் 4**

**முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை ராஜபக்ச அரசு இன்னும் கைவிடவில்லை. வலது கையில் கொடுப்பதுபோல நடித்துவிட்டு, அதனை இடதுகையால் பறிக்கும் நயவஞ்சக அரசியலையே இன்னமும் முன்னெடுத்து வருகின்றது.**

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட் - 19 தொற்றால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்கு உலகில் சிறு பரப்பளவுடைய நாடுகள்கூட அனுமதி வழங்கியபோதும், அதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கவில்லை. முஸ்லிம் மக்களின் மத உரிமை மறுக்கப்பட்டதுடன், நம்பிக்கையும் சிதைக்கப்பட்டது. மக்களின் வலி, வேதனையில்கூட அரச தரப்பினர் அரசியல் ஆதாயம் பெற்றனர். ஜெனிவாத் தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில், சர்வதேச அழுத்தங்களை சமாளிப்பதற்காகவும், முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காகவும் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய முடியும் என்ற அறிவிப்பை விடுத்து ராஜபக்சக்கள் அரசியல் செய்கின்றனர். இம்ரான் கான் வந்துசென்ற பிறகு வர்த்தமானி அறிவித்தல் வெளியானது. அத்துடன் இப்பிரச்சினை தீர்ந்துவிடும் என மக்கள் கருதினர். ஆனால் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் வலுப்பெற்ற நல் உறவைச் சீர்குலைக்கும் வகையில் தற்போது இடத்தேர்வுப் பிரச்சினையை அரசு கிளப்பிவிட்டுள்ளது. அடக்கம் செய்வதற்குப் பொருத்தமான பல்வேறு இடங்கள் இருந்தும் அரசு அரசியலுக்காக இரணை தீவு தெரிவுசெய்யப்பட்டுள்ளது - என்றார். (ப)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 4

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் வண்ணை வைத்தீஸ்வர சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 27 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஹெரோய்ன் வைத்திருந்தவர் மறியலில்!

யாழ்ப்பாணம், மார்ச் 4

2 கிராம் 710 மில்லிக் கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.


இந்த நபரை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பீற்றர்போல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ற-319)

## மருத்துவ தம்பதியர் தாக்குதலில் காயம்

வவுனியா, மார்ச் 4

வவுனியா, வைரவப் புளியங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் இனந்தெரியாத நபர்கள் புகுந்து தாக்குதல் நடத்தியதில் மருத்துவர்களான கணவனும், மனைவியும் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் நான்கு பேர் கொண்ட இனந்தெரியாத குழு வீட்டுக்குள் புகுந்து உறங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது கம்பியால் தாக்கு தல் நடத்தியதுடன், வீட்டில் இருந்த அவர்கள் இருவரினதும் கைத்தொலைபேசிகள், கைப்பை, மோட்டார் சைக்கிள் திறப்பு, கைக்கடிகாரம் மற்றும் சி.சி.ரி.வி வீடியோ சேமிப்பு பெட்டகம் என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளதுடன் வீட்டில் இருந்த தொலைக்காட்சி மற்றும் சி.சி.ரி.வி என்ப வற்றையும் உடைத்துச் சேதப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (ற-18,110)



## குடிதண்ணீர் விநியோகத்தை விரைவுபடுத்த கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 4

முல்லைத்தீவு ஒதியமலைக் கிராமத்தில் குடிதண்ணீர்த் திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு கிராம பொது அமைப்புகளின் பிரதிநிதிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் குடிதண்ணீர் திட்டத்துக்கான வேலைகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் குடிதண்ணீர் விநியோகம் நடைபெறவில்லை. ஒதியமலைக் கிராமத்தில் நிலவும் குடிதண்ணீர் நெருக்கடியால் விரைவாக குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளுமாறும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ-13)



## ‘சௌபாக்கியா திட்டம்’ வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா, மார்ச் 4

அரசின் வறுமை ஒழிப்பு செயற்றிட்டத்துக்கு அமைய உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட ‘சௌபாக்கியா’ உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்ட ஆரம்ப நிகழ்வு வவுனியா மணிபுரம் கிராமத்தில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். இந்தத் திட்டத்தின் கீழ் வவுனியாவில் 10 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு கிராமத்துக்கும் 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ச-110)

## புடைவையகத்தில் தீ விபத்து

கிளிநொச்சி, மார்ச் 4

கிளிநொச்சி நகரப் பகுதியில் மக்கள் வங்கிக்கு அருகில் உள்ள புடைவை விற்பனை நிலையமொன்றில் நேற்று முன்தினம் இரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்புப் பிரிவினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதும் பெறுமதிமிக்க பொருள்கள் மற்றும் புடைவைகள் தீயிலெரிந்து நாசமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-12)



## மைதானங்களுக்கு அடிக்கல்

கிளிநொச்சி, மார்ச் 4

“பிரதேசத்துக்கு ஒரு விளையாட்டு மைதானம்” என்ற திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு மைதானங்களுக்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நடப்பட்டது.

கரைச்சி பிரதேச செயலக பிரிவில் மலையாளபுரம் புதியபாரதி விளையாட்டுக்கழகம், கண்டாவளையில் கல்மடுநகர் விளையாட்டுக் கழகம், பச்சிலைப்பள்ளி யில் அரசர்கேணி பூதவ ராஜர் விளையாட்டுக் கழகம், பூநகரியில் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் மைதானங்களுக்கான அடிக்கற்களும் நடப்பட்டன. (ஐ)


## யானைகள் அட்டகாசம் தருமபுரத்தில் அதிகரிப்பு



கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடு, தருமபுரம், பெரிய குளம், முரசுமோட்டை, உரியான் போன்ற பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. தருமபுரம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்குள் அண்மையில் அதிகாலை வேளையில் புகுந்த இரு யானைகள் 12 தென்னை மரங்களை அழித்துள்ளன. அதேபோல் நேற்றுமுன்தினம் பயன் தரும் நிலையிலிருந்த 5 தென்னை மரங்களை முற்றாக சேதப்படுத்தியுள்ளன. இது தொடர்பில் தருமபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதால் மக்களின் தற்பாதுகாப்புக்காக யானை வெடிகள் வழங்கப்பட்டன. இது தொடர்பில் நிரந்தரத் தீர்வை பெற்றுத் தரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-113)

ஓம்
முருகன் துணை

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

## திரு. செல்வநாயகம் பாலச்சந்திரன்

(Retired Draughtsman, Colombo Municipal Council)

முன்னாள் அறங்காவலர், முன்னாள் தேர்த்திருவிழா உபயகாரர்
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் - கொழும்பு-13)

திதி - மாசித் திங்கள் தைப்பூசம் நக்ர்ந்துவரும் ஷஷ்டி
(04.03.2021)

அன்புள்ள அப்பா,
உன் உழைப்பு
எம் கல்விக்கு தருவாக்கினாய்
உன் உதிரம்
எம் கனவுக்கு எருவாக்கினாய்
எம் வாழ்விற்கு
கலங்கரையாய் வழிகாட்டினாய்
எம் நரம்பிற்குள்
உரமான திருவாகினாய்
நாள் முழுதும்
நிறைவான நினைவாகினாய்
தாழ் தொழுது தினமேத்தும்
இறையாகினாய்

அன்னை மடியில்
22.01.1949

முருகன் அரவணைப்பில்
14.02.2020

தங்கள் நினைவால் தினமும் முகிழ்வுறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
மற்றும் பேரப்பிள்ளைகள்.

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## ஐயாத்துரை வினாயகமூர்த்தி

(உரிமையாளர்
A.V.M. போட்டோ ஸ்ருடியோ, கொடிகாமம்)

கலைகளுக்கு வித்தகரே எமை மெழுகாய் உருக்கியவரே
உமை நினைக்கும் போதெல்லாம் கண்ணீர் மட்டுமே எமக்கு ஆறுதல் தருகிறது
எமை எம் பெயர் சொல்லி அழைத்தவர்களை விட
A.V.Mஇன் பிள்ளைகள் என அழைத்தவரே அதிகம்
உங்கள் தியாகம் அளப்பரியது
இனி ஓர் பிறவி வேண்டும் என எண்ணியதில்லை
அவ்வாறு நிகழ்ந்தால் மீண்டும் உம்
பிள்ளைகளாக பிறக்கவேண்டும்



அன்னாரின் 2ஆம் ஆண்டு சிராத்த தின நிகழ்வு இன்று (04.03.2021) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெற்று அதன் பின் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிறப்பு
26.01.1959

இறப்பு
25.02.2019

திதி: அபரபக்க சஷ்டி

குடும்பத்தினர்
புகையிரத நிலைய வீதி, கொடிகாமம்.

# கொரோனாத் தொற்றும் உள்ளூர் விவசாயிகளும்



வசந்தகுமரர் குமரதீபன்
சிரேஸ்ட விரிவுரையாளர்
சந்தைபடுத்தல் துறை
யாழ்.பல்கலைக் கழகம்



கொரோனாத்தொற்று ஆரம்பித்து ஒரு வருடம் கடந்தும் எம்மில் பலர் இதுவும் கடந்துபோகும் என்றபடி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அனைத்து நாடுகளும் இந்தக் கொடிய நோயுடன் போராட முடியாமல் தத்தளிக்கின்ற நிலையை நாம் இன்று காண்கின்றோம். கொரோனாப் பெருந்தொற்றுக்கான தற்காலிகத் தீர்வாக சில தடுப்பூசிகள் வழங்கும் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், கொரோனாத் தொற்றானது உள்ளூர் விவசாய சந்தைப்படுத்தலில் எந்தளவுதூரம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் இந்தப் பத்தியில் நோக்குவோம்.

துன்பத்திலும் சிறு இன்பம் என்பார்கள். அவ்வாறான வாய்ப்பொன்றைத்தான் யாழ்ப்பாண விவசாயிகளுக்கு இந்தப் பெருந்தொற்று வழங்கியது. ஆனால் அந்த வாய்ப்புத் தவறவிடப்பட்டுவிட்டது என்பதுதான் உண்மை. சந்தைகளுக்குள் கொரோனா ஊடுருவியதை அடுத்து பல சந்தைகள் தற்காலிகமாக மூடப்பட்டன. இதையடுத்து வியாபாரிகள் சந்தைகளுக்கு வெளியில் தற்காலிகக் கொட்டகைகளில் விற்பனைகளை முன்னெடுத்திருந்தனர். ஆனால் இந்த வாய்ப்பை விவசாயி கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நுகர்வோருக்குரிய பொருள்களை நேரடியாக வழங்கியிருக்கலாம். இந்த வாய்ப்பு தவறவிடப்பட்டுவிட்டது என்பதுதான் உண்மை. அவ்வாறு நேரடிச் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டிருந்தால் விவசாயிகள் நிச்சயம் பெரும்தொகை இலாபத்தை ஈட்டியிருக்கலாம். இடைத்தரகர்களுக்குச் செல்லும் பணத்தை தமக்குரியதாக்கியிருக்கலாம்.

நவீன கணனி மயப்படுத்தப்பட்ட விற்பனை மற்றும் விளம்பரப்படுத்தல் முறைகளை பல வியாபார தாபனங்கள் கையாண்டு வெற்றி கண்டுள்ள இந்தக் காலகட்டத்தில் இன்னமும் எமது விவசாயிகள் பாரம்பரிய முறையில் விற்பனை மற்றும் விளம்பர நடவடிக்கைகளை பின்பற்றுவது கவலைக்குரியது. அது மட்டுமல்லாமல் இவ்விடயத்தில் வாடிக்கையாளருடனான நேரடியான மற்றும் தொடர்ச்சியான உறவு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. வாடிக்கையாளருடைய தேவைகளையும் விருப்பங்களையும் இனங்காணுதலே வாடிக்கையாளருடனான நேரடியான மற்றும் தொடர்ச்சியான உறவு எனும் செயற்பாட்டிற்கு பிரதான அடித்தளமாகின்றது. இந்த வியாபாரப் படிநிலைகள் எல்லாம் வாடிக்கையாளருக்கு பொருள்களை நேரடியாக விற்கும்போதே கிட்டும். அவ்வாறான நிலைமையை உருவாக்காமல் உள்ளூர் விவசாயிகளால் அசாதாரண இலாபம் பெறமுடியாது.

விவசாயிகள் வாடிக்கையாளருடனான உறவை என்ன காரணத்துக்காகத் தவறவிடுகின்றனர். அவற்றுக்குரிய காரணங்களாக பின்வருவனவற்றை வகைப்படுத்தலாம்.

### நேரம் போதாமை

உற்பத்தியில் அதிகநேரம் செலவழிப்பதனால், அவர்களுடைய உழைப்பு நேரத்தில் பெரும் பகுதி உற்பத்திச் செயற்பாட்டில் சென்றுவிடும். இதனால் வாடிக்கையாளருடனான நேரடித் தொடர்புக்கு நேரப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. இந்த நேரப்பற்றாக்குறை ஆளணிப் பற்றாக்குறையின் அடிப்படையிலும் உருவாகின்றது.

### ஆபத்துக்களை எதிர்கொள்ளவதிலுள்ள தயக்கம்

பொதுவாக ஆபத்துகளை அதிகம் எதிர்கொள்வதை விரும்பாதவர்களா பல விவசாயிகள் உள்ளனர். அதிகளவான அசாதாரண சூழ்நிலையில் உற்பத்திப் பொருள்களைப் பாதுகாக்கப் போராடுவதிலேயே விவசாயிகளின் காலம் நகர்வதால் மேற்கொண்டு கூடுதல் ஆபத்தை எதிர்கொள்வதையும் அவர்கள் விரும்புவதில்லை.

### தாமதமான வங்கிக்கடன்

பொதுவாக விவசாயக் கடன்களைவிட வியாபாரக்கடன் அதிகம் வழங்கப்படுவதால் தமது சொந்தச் சொத்துகளை விற்று மற்றும் அடகு வைத்தே உற்பத்தி மேற்கொள்ளக்கூடிய நிலையில் விவசாயிகள் உள்ளனர். ஆதலால் ஒவ்வொரு போக விவசாய முயற்சிகளின் போதும் பெரும் சிக்கலுக்குள்தான் விவசாயிகளின் வாழ்க்கை நகர்கின்றது. இவ்வாறான பின்னடைவுகளை எதிர்கொள்ளும் விவசாயிகள், தம் விவசாய மற்றும் வியாபார உத்தியை மேம்படுத்தி உயரிய மற்றும் சீரிய இலாபத்தைப் பெறுவதற்கு என்னென்ன படிநிலைகளைக் கையாளலாம்.



### சமூக வலைத்தள விளம்பரம்:

தற்போது தொடுதிரை அலைபேசிகள் பெரும்பாலானவர்களிடம் உள்ளன. இந்தத் தொடுதிரை அலைபேசிகளும், அவற்றின் மூலம் பயன்படுத்தப்படும் சமூக வலைத்தளப் பாவனையும் பெரும் சந்தையை ஏற்படுத்தி விட்டுள்ளது என்பதுதான் உண்மை. இந்தச் சமூக வலைத்தளங்களில் தமது பொருள்களை வியாபாரிகளால் விற்பனை செய்துகொள்ள முடியும்.

விவசாயிகளுக்கான ஒரு சந்தையை உருவாக்கி அதில் விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களை விற்கும் வசதிகளை மேற்கொள்வதன் மூலம் இலாபத்தை கணிசமாக உயர்த்தலாம். இங்கு இடைத்தரகர்கள் எவருக்கும் இடமில்லை.

### வலைப்பின்னல் விற்பனை

விவசாயிகள் தமக்குள் ஒரு தொடர்பை விரிவுபடுத்தி வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யலாம். இந்த வலைப்பின்னலூடாக தமது விவசாய உற்பத்திப் பொருள்களை தூர இடங்களிலுள்ள உற்பத்தி இடங்களுக்கும் பரிமாற்றிக்கொள்ளலாம்.

### விலை நிர்ணயம்

ஒரு பொருளை உற்பத்தி செய்யும் நிறுவனம்தான் அந்தப் பொருளுக்கான விலையை நிர்ணயம் செய்யும். இது உலக வழக்கம். ஆனால் விவசாயம் என்பது அவ்வாறு அமைவதில்லை என்பது துயரத்திலும் பெரும் துயரம். விவசாயிகளின் உற்பத்திகளுக்கு விலை விவசாயிகளால் நிர்ணயிக்கப்படுவ தில்லை. அதில் பல்வேறு தலையீடுகள் உள்ளன. இந்த நிலை மாற்றம் பெற்று தனது உற்பத்திக்கு தானே விலையை நிர்ணயிக்கும்படி விவசாயி என்று அனுமதிக்கப்படுகின்றானோ அன்றுதான் விவசாயம் மீட்சியடையும்.



“சந்தைகளுக்குள் கொரோனா ஊடுருவியதை அடுத்து பல சந்தைகள் தற்காலிகமாக மூடப்பட்டன. இதையடுத்து வியாபாரிகள் சந்தைகளுக்கு வெளியில் தற்காலிகக் கொட்டகைகளில் விற்பனைகளை முன்னெடுத்திருந்தனர். ஆனால் இந்த வாய்ப்பை விவசாயிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நுகர்வோருக்குரிய பொருள்களை நேரடியாக வழங்கியிருக்கலாம். இந்த வாய்ப்பு தவறவிடப்பட்டுவிட்டது என்பதுதான் உண்மை.”

## இன்றைய நாள்

**மேடம்:** நாள் முழுக்க மகிழ்ச்சிகரமான மனநிலையுடன் காணப்படுவீர்கள். கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உதவிகரமாக இருப்பார்கள். மாற்றங்கள் விரும்பும்படி அமையும்..

**இடபம்:** வெளிநாட்டிலிருந்து வரும் செய்திகள் மகிழ வைக்கும். உங்களை நீங்களே சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றிக் கொள்வீர்கள். குடும்ப ஒற்றுமை பலப்படும். சந்திப்புகள் சுமுகமாக நடைபெறும்.

**மிதுனம்:** பணியிடத்தில் முயற்சி செய்து சாதனை செய்வீர்கள். உடன்பிறந்தவர்களுக்கு உதவிகரமாக இருப்பீர்கள். வாழ்வில் முன்னேறுவது குறித்துச் சிந்திப்பீர்கள்.

**கடகம்:** குடும்ப நபர் ஒருவரின் திருமணம் சிறப்பாக நடைபெறும். நலம் விரும்பும் நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். வாழ்க்கைத்துணை மூலம் தேவையான உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** வருமானம் பற்றிய புதிய முயற்சிகள் மேற்கொள்வீர்கள். தொழில் சுமாராக இருக்கும். மனம் மகிழும் சம்பவம் நடக்கும். பழைய மனக்குழப்பம் மாறும். பொருளாதார விருத்தி உண்டு.

**கன்னி:** அக்கம் பக்கத்து வீட்டாரின் அன்புத் தொல்லையைச் சந்திப்பீர்கள். மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். முன்னேற்றம் உண்டு. விஷயத்தைக்கூட சற்றுப் போராடி முடிப்பீர்கள்.

**துலாம்:** நெருக்கமானவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். சில விஷயங்களிலிருந்து ஒதுங்குவதால் நன்மை அடைவீர்கள். மனச்சலனம் ஏற்படும்.

**விருச்சிகம்:** உங்கள் செயல் ஒன்று மற்றவருக்கு ஆதங்கம் ஏற்படுத்தும். வாகனப்பழுதை சரிசெய்வது குறித்து யோசிப்பீர்கள். பொது மக்களிடையே புகழும் பெருமையும் அதிகரிக்கும்..

**தனுசு:** பணியில் பல காரணங்களுக்காக நிறையப் பேச வேண்டி வரும். நண்பர்களால் பிரச்னை ஏற்பட்டாலும் மன்னிப்பீர்கள். சில புதுமைகளைச் செய்து பிறரின் கவனத்தை ஈர்ப்பீர்கள்.

**மகரம்:** நன்மை செய்து புகழ் பெறுவீர்கள். நடுநிலையாக இருப்பீர்கள். சிலர் உங்களை விமர்சனம் செய்து சீண்டிப் பார்ப்பார்கள். உங்களின் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டி வரும்.

**கும்பம்:** கோபத்தைக் கட்டுப்படுத்திச் செயற்பட்டு உயர்வீர்கள். உரையாடல்களில் ஈடுபடுவதால் உங்கள் புரிதல் அதிகரிக்கும். வாழ்வில் உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள்.

**மீனம்:** நண்பர்களால் நன்மை உண்டு. சமூகத்தில் அந்தஸ்து உயரும். பணியாளர்கள் கடமையுணர்வுடன் செயல்படுவர். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிக்காவிட்டால் சிரமம் ஏற்படும்.

# முசலி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இணைத்தலைவர் – தவிசாளர் மோதல்

### சமரசம் செய்தார் செல்வம்

**மன்னார்,மார்ச் 4**

**மன்னார், முசலி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், இணைத்தலைவர் கா.மஸ்தானுக்கும், முசலி பிரதேச சபையின் தவிசாளருக்குமிடையே பெரும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இருவருக்கும் இடையில் புகுந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இருவரையும் சமரசப்படுத்தி, அந்தத் தர்க்க மோதலை முடிவுக்குக் கொண்டு வந்தார்.**



முசலி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'கிராமிய மைதானங்களைச் சீரமைத்தல்' செயல்பாட்டில் முசலி பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள மைதானத்துக்கு தமது பிரதேச சபையின் அனுமதி பெறப்படவில்லை என்று முசலி பிரதேச சபை தவிசாளர் சுபிஹான் போர்க்கொடி தூக்கினார்.

மறுத்த இணைத்தலைவர் மஸ்தான் "இது பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம். தேவை இல்லாத விடயங்களைப் பேசி மக்கள் பிரச்சினைகளைத்திசைதிருப்பக்கூடாது" என்று தவிசாளரை அடக்கினார்.

இதனை தொடர்ந்து தவிசாளர் கருத்துத் தெரிவிக்க, மஸ்தான் கருத்து தெரிவிக்க என்று மாறி மாறி சொற்கணைகளால் இருவரும் மோதிக்கொண்டனர். சுமார் அரை மணி நேரமாக இது தொடர் பான விவாதங்களே கூட்டத்தில் இடம் பெற்றன.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இருவரையும் சமரசம் செய்தார். அதன்பின்னர் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. (ப-213)

## தவக்கால சிந்தனை


### தன்னை இழப்பதே நோன்பு

நோன்பு என்பது சடங்கல்ல. அது ஒரு சபதம். எடுத்த காரியத்தை முடித்தே தீருவேன் என்ற தீரம். தன்னை இழந்து பிறர் வாழத் தூய்மையுடன் உழைப்பதும் நோன்புதான். தன் மழலைக்காக ஊன் உறக்கம் மறந்து உதிரத்தை ஊட்டி உயர்வைக் கொடுப்பது பெற்றோரின் நோன்பு. இனம், மொழி தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற நோக்கில் தடைகளை, எதிர்ப்பை, அச்சுறுத்தலை உடைத்து நீதிக்காக குரல்கொடுப்பது உண்மையான தலைமைத்துவ நோன்பாகும்.

நோன்பு என்பது வலிந்து எம்மேல் நாமே சுமத்திக் கொள்வதல்ல. தியாகம் கலந்த சுகமான இழப்புக்களை அனுபவிப்பதே ஆகும். தன்னைக் கடந்து தன்னையே மறந்து பிறர் வாழவேண்டுமென்ற அடங்காத் துடிப்பில் தன்னலத்தை அர்ப்பணிப்பதுதான் நோன்பு.

எனவே தவக்காலம் மட்டும் நோன்புக் காலமல்ல. நோன்பே எமது ஆயுள்காலமாகட்டும். சத்தமில்லாது சபதம் ஏற்று நித்தமும் நல்ல செயல்கள் ஆற்றுவதே நோன்புக்கான தூய இலக்கணமாகும். இந்த நோன்பு அக, புற தூய்மைக்கான ஒரு காரணியாக அமைந்தால் அதில் பிறப்பது மகிழ்ச்சியும் அமைதியும் மனநிறைவுமாகும்.

**எஸ்.யேசுதாஸ்**
கொழுமப்புத்துறை.



# பல்கலை மாணவர்களுக்கு அடுத்த மாதம் தடுப்பூசி

கொழும்பு,மார்ச் 4

பல்கலைக்கழக மாணவர்களுக்கு அடுத்த மாதம் முதல் கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல கட்டங்களின் கீழ் ஒரு லட்சத்து 35 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தடுப்பூசிகள் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

### குழந்தையை அடித்து சித்திரவதை;

# கைதான தாய்க்கு மருத்துவ பரிசோதனை

### நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 4

8 மாதக் குழந்தையை அடித்து துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தாயை சட்ட மருத்துவ வல்லுநர் முன்னிலையில் முற்படுத்தி மனநிலை மற்றும் பிற மருத்துவப் பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், குழந்தையின் உடல்நிலை தொடர்பில் சட்ட மருத்துவ வல்லுநரின் அறிக்கையைப் பெறுவதற்கு வசதியாக, இருவரையும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்குமாறும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் வேளாங்கன்னித் தோட்டம் பகுதியில் 8 மாதங்கள் நிரம்பிய குழந்தையை அதனுடைய தாய் அடித்துத் துன்புறுத்திய காணொலிப் பதிவு சமூக வலைத்தளங்களில் பரவியது. அதனையடுத்து நல்லூர் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் யாழ்ப்பாணம் பொலிஸாரும் இணைந்து துன்புறுத்தலுக்கு உள்ளான குழந்தையை நேற்று மீட்டனர். தாய் கைது செய்யப்பட்டிருந்தார்.

திருகோணமலையைச் சேர்ந்த 24 வயதான குறித்த பெண், கணவர் அரபு நாடு ஒன்றில் தொழில்வாய்ப்புப் பெற்றுச் சென்ற நிலையில் யாழ்ப்பாணம் வேளாங்கன்னித் தோட்டம் பகுதியில் வாடகைக்கு வீடு எடுத்து வசித்து வந்தார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்தது. (ப)

# JAFFNA MUNICIPAL COUNCIL

## Request for EXPRESSION OF INTEREST

## for Recreational Activities for Tourist at Jaffna Lagoon Park.

1. The Mayor now invites eligible service providers to indicate their interest in providing the Recreational Activities for Tourist to implement at **Jaffna Lagoon Park.**
2. Interested service providers must provide information indicating that they are qualified to perform the services (Broachers, description of similar assignments, experience in similar conditions, availability of appropriate skilled staff etc). Service providers may attach documents to show their qualifications.
3. Interested Service Providers may obtain further information at the address given below from 04.03.2021 to 18.03.2021 between 9.00am to 3.00pm.
   Address: Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur
   Contact No: 021 221 6468, 021 222 2019, 021 222 8874 Fax No: 021 222 2334
   Email: mcjaffnamailt@yahoo.com
4. A complete set of Expression of Interest (EOI) documents may be purchased by interested service providers on the submission of written application to the **Office of the Works Engineer, Jaffna Municipal Council from 04.03.2021 until 18.03.2021 from 9.00am to 3.00 pm upon payments of a non-refundable fees of Rs. 1000/- + taxes. The method of payment should be by cash.**
5. Expression of Interest shall be delivered or sent by registered post to the above address on or before 19.03.2021 at 2.00pm. Late EOI will be rejected. EOI will be opened soon after closing in the presence of the service providers/ representatives who choose to attend.
6. The Mayor of Jaffna Municipal Council reserves the right to accept or reject any EOI.
7. **Basic requirements.**
   - The service provider should ensure that he/ she should have a good business culture in Jaffna.
   - The service provider should ensure that their boating activities and operation cannot affect the Jaffna's culture and traditions.
   - The service provider should ensure that they should have fully insurance arrangements for both boating assets and passengers.
   - The service provider should ensure that their boating activities should be feasible for environment (should be done with environmental friendly manner)
   - The service provider should keep the leisure area clean and beautiful.

V.Manivannan,
Chairman,
Regional Procurement Committee,
Jaffna Municipal Council,
Nallur, Jaffna.
03.03.2021

## வீடு வாடகைக்கு

5 அறைகள் கொண்ட வீடும் & அறைகளும் (மாணவர்களுக்கு) வாடகைக்கு உண்டு.
21/2, கலாசாலை வீதி, திருநெல்வேலி.
T.P: 076 998 0837

## வீடு வாடகைக்கு

இராசவீதி சந்தி. ஆடியபாதம் றோட். திருநெல்வேலியில் 05 அறைகள். குசினி. ஹோல். இரண்டு இணைந்த குளியலறை களுடன் வீடு வாடகைக்கும். தளபாடங்கள் விற்பனைக்கும் உண்டு. அரச உத்தியோகத்தர்கள். அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- 076 295 4484

உ
சிவமயம்

## தசாகாதி கிருஹஜக்ஞ அழைப்பு



நிகழும் சார்வரி வருடம் மாசித் திங்கள் 23.02.2021 ஆம் ஆண்டு செவ்வாய்க்கிழமையும், துவாதசித் திதியும் பூர்வபட்ச தினத்தில் இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயார்

அமரர் திருமதி

### மீனாட்சி அம்மா ஜெகன்நாதஐயர்

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம் : 04.03.2021 வியாழக்கிழமை காலை 10.00 மணி
ஏகோதிஷ்டம் : 05.03.2021 வெள்ளிக்கிழமை
சபிண்டீகரணம் : 06.03.2021 சனிக்கிழமை
கிருஹஜக்ஞம் : 07.03.2021 ஞாயிற்றுக்கிழமை


மேற்படி ஆத்ம சாந்தி கிரியைகளில் பங்குபற்றி எமது தாயாரின் ஆத்ம ஈடேற்றத்திற்காக பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக் கொள்வதோடு 07.03.2021 மதியம் நடைபெற இருக்கும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஆலடி ஸ்ரீ சித்திவிநாயகர்
ஆலய வீதி, மகாறம்பைக்குளம்
வவுனியா

குடும்பத்தினர்
சி.ஜெகன்நாத ஐயர்
076 023 7283

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 - 02 - 1939



மறைவு
01 - 03 - 2021

### திரு. கந்தையா அம்பலவாணர் (அரசன்)

சுப்பிரமணியம் வீதி, இடைப்பிட்டி, காரைநகர்

காரைநகர். இடைப்பிட்டியை பிறப்பிடமாகவும் டொரோண்டோ. கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திரு.கந்தையா அம்பலவாணர் (அரசன்) அவர்கள் 01.03.2021 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்ற ஆறுமுகம் சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும். விமலாதேவி அவர்களின் பாசமிகு கணவரும். காலம் சென்றவர்களான ஆறுமுகம். வேலுப்பிள்ளை. வள்ளியம்மை அவர்களின் அன்புச் சகோதரனும். கந்தசாமி. சுப்பிரமணியம். அம்பலவாணர். தியாகராஜா. நடராசா. தங்கமலர் அவர்களின் அன்பு மைத்துனரும். மனோகரதாஸ் (கனடா). மனோரதி (கனடா). மனோகௌரி (நியூஸிலாந்து). மனோதர்ஷினி (கனடா). மனோபாலன் (அமெரிக்கா) அவர்களின் பாசமிகு தந்தையாரும் புஸ்பவதி. பார்த்திபன். ஜெகன். கிரிஜா அவர்களின் அன்பு மாமனாரும். நிரோஜன். தேவசேனா கஜந்தன். ஜயனி. சாருகன். சந்தோஷ். அஜீஷ். வெண்பா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07.03.2021 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 தொடக்கம் முற்பகல் 10.30 மணி வரை Chapel Ridge Funeral Home 8911 Woodbine Avenue Markham,ON L3R 5G1 என்ற முகவரியில் வைக்கப்பட்டு பின்னர் தகனக் கிரியை களுக்காக முற்பகல் 11.00 மணியளவில் Highland Hills Crematorium 12492 Woodbine Avenue Gormley, ON L0H 1G0 எடுத்துச் செல்லப்படும்.
(நேரடி ஒளிபரப்பு) https://video.ibm.com/channel/chapelridgefh2


இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மனோகரதாஸ் (மகன், கனடா) : +1 416-994-7229
மனோரதி (மகள் , கனடா) : +1 416-824-4384
மனோகௌரி (மகள், நியூஸிலாந்து) : +64 21 208 2319
மனோதர்ஷினி (மகள், கனடா) : +1 647-470-8407
மனோபாலன்/கண்ணன் (மகன், அமெரிக்கா) : +1 (413) 474-1810
புவி (பெறாமகன், கிளிநொச்சி) : +94 077 32 054 96
தனா (பெறாமகன், கிளிநொச்சி : +94 077 07 12 402

தகவல்:
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
04 . 04 . 1945



இறப்பு
14 . 02 . 2020

அமரர்

### ஐயாத்துரை தியாகராஜா

(சித்திரகலா ஸ்ருடியோ உடுவில்)

திதி (04.03.2021)

ஆண்டுகள் ஒன்று ஆகிவிட்டது
ஆறாத்துயரை நாங்கள் அனுபவிக்க
மீளாத்துயில் கொண்டீர்கள் அப்பா!
விடியும் பொழுதெல்லாம் உங்கள்
நினைவே எங்கள் மனதெல்லாம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# முதல் தடுப்பூசியால் 76 வீதமே பாதுகாப்பு




கொழும்பு,மார்ச் 4

கொரோனாத் தொற்றுக்கான, அஸ்ட்ராஜெனகா தடுப்பூசியின் முதல் டோஸால், 76 வீதமே பாதுகாப்புக் கிடைக்கும் என்று மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசகர் மருத்துவர் தனுஷா தசநாயக்க தெரிவித்துள்ளார். இலங்கை மருத்துவ சங்கத்தின் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அஸ்ட்ராசெனகா தடுப்பூசியின் முதல் டோஸ் ஒரு நபருக்கு 76 வீதம் தொற்றிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது. இரண்டாவது டோஸ் முழுமையாகப் பாதுகாப்பளிக்கும். எனினும் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 10 தொடக்கம் 12 வாரங்களில் செலுத்தப்படும். தடுப்பூசிக்கு உடனடி எதிர்வினை 48 தொடக்கம் 72 மணித்தியாலம் நீடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சு-இ)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் கமல்ராஜ் அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்

**சிதம்பரப்பிள்ளை கெங்காதரன்**



தோற்றம் 25.10.1964 | மறைவு 02.03.2021

நெஞ்சோடு உம் நினைவு நித்தமும்
உறவாட வைத்துச் சென்றீரே!
உமது பாச நினைவுகள் என்றும்
எம்மை விட்டகலாது கண்ணீருடன்
உங்களது ஆத்மா சாந்திக்காக
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ...ஓம் சாந்தி...ஓம் சாந்தி..

ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம்,
காரைநகர்.



## மரண அறிவித்தல்

பிறப்பு 23.07.1936 | இறப்பு 02.03.2021



**யேசுதாசன் திரேசம்மா (அருள்மணி)**

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யேசுதாசன் திரேசம்மா (அருள்மணி) அவர்கள் 02.03.2021 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (04.03.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

78/11, கடற்கரை வீதி,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 480 5210


## துப்பாக்கி அனுமதிக்கு காலம் நீடிப்பு

கொழும்பு,மார்ச் 4

சகல துப்பாக்கிகளுக்குமான அனுமதிப் பத்திரத்தை எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி வரை பயன்படுத்த முடியும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. பாதுகாப்பு அமைச்சு மற்றும் மாவட்டச் செயலகங்களினூடாக, சகல துப்பாக்கிகளையும் புதுப்பிக்கும் காலம் கடந்த 28 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.எனினும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் புதிய பதிவு நடவடிக்கைகளை எவ்வித கட்டணமும் இன்றி முன்னெடுக்க முடியும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (சு-இ)


## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றுக்கு மருந்தாளர் ( Pharmacist ) உடனடியாக தேவை

தொடர்புகளுக்கு:- 074 199 8612


## யாழ்ப்பாணம் மாநகர சபை

## முனீஸ்வரன் வீதி நெடுந்தூர பேருந்து நிலையம் மற்றும் மாநகர சபையினால் நிர்வகிக்கப்படும் சந்தைகளின் பராமரிப்பிற்கான கூறுவிலை கோருதல்

1. யாழ்ப்பாண மாநகர சபை, பெறுகைக்குழு தலைவர் நெடுந்தூர பேருந்து நிலையம் மற்றும் கீழ்காட்டப்பட்டுள்ள சந்தைகளின் பராமரிப்பிற்காக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரிடமிருந்து கேள்விகளை கோருகின்றார்.
   - நவீன சந்தை
   - நாவாந்துறை சந்தை
   - குருநகர் சந்தை
   - செங்குந்தா சந்தை
   - பாசையூர் சந்தை
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தங்கள் சேவை முன் அனுபவம், ஆளணி என்பவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள சேவை வழங்குனர்கள் இது தொடர்பான மேலதிக விபரங்களை 021-2228874, 021-2222334 எனும் தொலைபேசியூடாகவோ mcjaffnamailt@yahoo.com எனும் மின்னஞ்சல் ஊடாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.
4. ஒவ்வொரு கேள்விதாரரும் நெடுந்தூர பேருந்து நிலையம் மற்றும் ஒவ்வொரு சந்தைக்குமான பராமரிப்பு செலவை தனித்தனியாக சமர்ப்பிக்க வேண்டும்.
5. நெடுந்தூர பேருந்து நிலையம் மற்றும் ஒவ்வொரு சந்தைக்கும் தனித்தனியாக கேள்விப் படிவத்தை 08.03.2021 ம் திகதி முதல் படிவமொன்றிற்கு கட்டணமாக ரூபா 500.00 இனை செலுத்தி வேலைப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.
6. நெடுந்தூர பேருந்து நிலையம் மற்றும் ஒவ்வொரு சந்தைக்கும் தனித்தனியாக கேள்விப்படிவத்துடன் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 20000.00 இனையும் செலுத்துதல் வேண்டும்.
7. தாங்கள் கேள்வியில் சித்திதாரராகும் பட்சத்தில் தங்களது ஒப்பந்தத்தொகையின் 5% இனை வங்கி பிணைமுறியாக சமர்ப்பித்தல் வேண்டும்.
8. கேள்விப்படிவங்கள் 22.03.2021 ம் திகதி மாலை 2.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினமே பிற்பகல் 2.30 மணிக்கு கேள்வி திறக்கப்படும்.
9. கேள்விச்சபையானது எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை கொண்டதாகும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

03.03.2021


## போனதெங்கே சொல் நண்பா...?





**குருநாதன் பிரபாகரன்(பிரபா)**

மண்ணுக்கு 14.08.1963 | விண்ணுக்கு 23.02.2021

தோழமையின் இலக்கணமே! பண்பின் ஒளிவிளக்கே!!
பள்ளியில் தொடங்கி பருவங்கள் கடந்த பின்னும்
நட்பென்ற சரத்திலே நம்மையெல்லாம்
தேடிச் சேர்த்துத் தொடுத்த பிரபா
உன்னை இழந்து விட்டு ஆறாத்துயரில் அரற்றுகிறோம்.
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்மனதில் உன் நினைவு என்னாளும் உயிர்வாழும்.

அன்னாரின் பிரிவால் துயருரும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

நண்பர்கள்
யாழ்.மத்திய கல்லூரி.



## கண்ணீர் அஞ்சலி

எமது வங்கிக்கிளையின் உதவி முகாமையாளர் திரு.குருநாதன் உருத்திராகரன் அவர்களின் அன்புச் சகோதரன்



**அமரர் குருநாதன் பிரபாகரன்**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
முகாமையாளரும் உத்தியோகத்தர்களும்
தேசிய சேமிப்பு வங்கி,
திருநெல்வேலிக்கிளை

# க.பொ.த. சா.தரப் பரீட்சையின் வினாத்தாள்களில் குழப்பங்கள்

## சைவசமய பாட ஆசிரியர்கள் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், மார்ச் 4**

**க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையின், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சைவசமய பாட வினாத்தாள்களில் பல குழப்பங்களும் முரண்நிலைகளும் காணப்படுகின்றன என்று சைவசமய பாட ஆசிரியர்கள் தமது அவதானிப்பைக் கூறுகின்றனர்.**

குறிப்பாக, ஒரு வினாவில் உப கேள்விகள் பல இருக்கும். அவற்றுக்குத் தனித்தனியே புள்ளிகள் எவ்வளவு என்பது குறிப்பிடப்படாது பொதுவான ஒட்டுமொத்த புள்ளிகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளதால், எந்தக் கேள்விக்கு விரிவான பதில் எழுதுவது என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதுதவிர, சுமாராக மூன்று அலகுகளை மாத்திரம் மையப்படுத்தியதாக கேள்விகள் அமைந்துள்ளன. பல அலகுகளையும் கைவிட்டுவிட்டதனால், மாணவர்களுக்கு அது பாதிப்பாக அமைகின்றது. அல்லது குறித்த மூன்று அலகுகளையும் கற்பதற்குத் தவறிய மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்.

அதுமட்டுமன்றி, வினாக்களில் சில இடங்களில் தெளிவுபடுத்துக என்றும் இன்னும் சில இடங்களில் விளக்குக என்றும் கேட்கப்பட்டுள்ளதனால், மாணவர்களுக்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதுபோன்று பல குழப்பங்கள் வினாத்தாள்களில் காணப்படுகின்றன என்று ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொரோனாத் தொற்றுக் காலத்தில் மாணவர்களின் கற்றல் செயல்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தன. அவ்வாறான நிலையிலும், மாணவர்களைக் குழப்பும் வகையிலான, முரண்நிலைகளை ஏற்படுத்தும் விதத்திலான வினாக்கள் நிறையவுள்ளன. இவை, மாணவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்.

இவ்வாறான தவறுகள் இனிமேல் வராதவாறு கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது கல்வி அமைச்சின் பொறுப்பு என்று சுட்டிக்காட்டிய ஆசிரியர்கள், இவற்றுக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்றும் கோரினர். (து-இ)


## மரண அறிவித்தல்



### தம்பு தர்மகுலசிங்கம்

கொம்மந்தறை, வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தர்மகுலசிங்கம் அவர்கள் நேற்று (03.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு தவமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இரத்தினம் செல்லபாக்கியம் தம்பதியரின பாசமிகு மருமகனும், மகேந்திரராணியின் அன்புக் கணவரும், சுதாகர் (கனடா), சுதர்சன் (கனடா), வசீகரன் (கனடா), வாசுகி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசக்தி (கனடா),மேகலா (கனடா), நிருஜா (கனடா), கணேசலிங்கம் (ஆசிரியர், யா/தொண்டமானாறு வீரகத்தி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தேனிசன் (கனடா), சாகித்தியா (கனடா), இலக்கியா (கனடா), இனியா (கனடா), அகரன் (கனடா), அக்சனா (கனடா), ஆதீஸ் (கனடா), கஜானன், வித்தகி ஆகியோரின் அன்புப் பேரனும், அனுலாதேவி (லண்டன்), கெங்காதேவி (இலங்கை), யோகேஸ்வரி (கனடா), வர்ணகுலசிங்கம் (லண்டன்), ஞானேஸ்வரி (லண்டன்), சிங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2021) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மயிலியதனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொம்மந்தறை,**
**வல்வெட்டித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


# ஐ.நாவின் பொறியிலிருந்து இலங்கை தப்பிக்க முடியாது

'2009இல் போர் முடிவடைந்த பின்னர் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில் மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படும் என்று இணங்கியமையே இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைக்குக் காரணம். இதனால், அதன்போது இணங்கியவாறு செயற்படுவதைத் தவிர இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து தப்பிக்க வேறு வழியில்லை'

இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'ஐ.நா. மனித உரிமைகள் விவகாரத்தை தற்போதைய அரசு முறையாகக் கையாளுகின்றது என்று கருதுகின்றீர்களா?' என்று அந்த நேர்காணலில் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

அதன்போது பதிலளித்த அவர், இலங்கை எந்தவொரு நாட்டுடனும் சண்டையிடாது இந்த விடயத்தைக் கையாள வேண்டும். தற்போது இலங்கை இந்தளவுக்கு நெருக்கடி நிலைமையை சந்திக்க போர் முடிவடைந்த பின்னர் அப்போதிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும், ஐ.நா. செயலாளர் நாயகமும் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில் இணங்கிய விடயங்களே காரணமாகும். அன்று மஹிந்த ராஜபக்ச மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கப்படும் என்று கூறியிருக்காவிட்டால், தற்போதுள்ள அழுத்தங்கள் இருந்திருக்காது. எவ்வாறாயினும் கடந்த நல்லாட்சி அரசின்போது, சர்வதேச சமூகத்துடன் எந்தவொரு பிரச்சினையையும் ஏற்படுத்திக்கொள்ளாது செயற்பட்டோம். இதன்மூலம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையையும் அதிகரித்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. ஆனால், முன்னைய ராஜபக்ச அரசு, ஐ.நா. செயலாளர் நாயகத்துடனான கூட்டு அறிக்கைக்குக் கட்டுப்பட்டுள்ளதால், அதனைச் செய்யாது அழுத்தங்களில் இருந்து தப்பிக்க முடியாது என்றும் ரணில் விக்கிரமசிங்க மேலும் சுட்டிக்காட்டினார். (ம-22)


## மரண அறிவித்தல்



**உதயம்**
**06 . 07 . 1937**

**அஸ்தமனம்**
**03 . 03 . 2021**

### தில்லையம்பலம் சிவபாக்கியம்

வளாக வீதி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், இருபாலை வீதி, கோண்டாவிலை (சிவபூமி பாடசாலை முன்பாக) வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று (03.03.2021) புதன்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், நாகேஸ்வரியின் (கிளி) சகோதரியும் ரஞ்சனாதேவி, மனோரஞ்சிதம், மகேந்திரராஜா (இத்தாலி), சிவனேஸ்வரன் (இலண்டன்), விக்னேஸ்வரன், புஸ்பராணி ஆகியோரின் தாயாரும், யசோதா, சுதர்ஷன் (இத்தாலி) ஆகியோரின் பெரியம்மாவும், வேலானந்தராஜா, மதியாபரணம், சித்திரா (இத்தாலி), கோமளா (இலண்டன்), காமினி, காலஞ்சென்ற புவன்ராஜா, இராஜேஸ்வரன், சயந்தினி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுரேகா, அனுதீபன், அனுசாந்தன் (ஜேர்மனி), சரண், லக்சதரண் (பிரான்ஸ்), நிரோஜன், விபூசணன், விதுஷன் (லண்டன்), சியானுஜன் (இத்தாலி), விதுஷா (லண்டன்), சௌமியா (லண்டன்), லவக்குமார், வேனுஜன், கஜனி, கம்சிகா, யதுர்ஷிகா, அக்ஷிகா, காருண்யா (இத்தாலி) ஆகியோரின் பேர்த்தியும், தபிஷனா, சுபிஷன், றியான் (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.03.2021) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பி.ப 1.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனத்திற்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புக்களுக்கு:**
**077 194 1723**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


## தீக்காயமடைந்த பெண் சிகிச்சை பயனின்றிச் சாவு

தீக்காயங்களுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பப் பெண், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அரியாலை மலர்மகள் வீதியைச் சேர்ந்த ஜெயக்குமார் ரஞ்சினி (வயது - 47) என்பவரே உயிரிழந்தார். இவர் இரண்டு பிள்ளைகளின் தாய்.

கடந்த 20ஆம் திகதி அவர், தனது வீட்டில் குப்பைகளுக்கு தீ வைக்கும் பொழுது அதன் மேல் மயங்கி வீழ்ந்து தீக்காயங்களுக்கு உள்ளானார். அவரை, அவரது மகன் மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்திருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார்.

(த-25,26)

## இரணைதீவை...

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கி கடந்த வாரத்தில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நிலையில், சுகாதார முறைப்படி உடல்களை அடக்கம் செய்வதற்காக இரணைதீவில் இடத்தை ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து அதற்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். சிறிய தீவான இரணைதீவில் 112 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில், அங்கு உடல்களை அடக்கம் செய்யும் தீர்மானத்துக்கு அந்தப் பிரதேச மக்கள் மற்றும் தமிழ், முஸ்லிம் கட்சியினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், அங்கு உடல்களை அடக்கம் செய்ய அனுமதிக்க முடியாது என்று கூறி அந்தப் பிரதேச மக்கள் நேற்றுக் காலை முதல் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டத்தில் பங்குத் தந்தையர்களும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். தமது பிரதேசத்தில் கொரோனாவால் உயிரிழந்தோரின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டாம் என்றும், இரணைதீவைக் கொரோனாத் தொற்றின் புதைகுழியாக்க வேண்டாம் என்றும் கோரி வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகியோருக்கு பிரதேச மக்கள் மனுக்களையும் அனுப்பிவைத்துள்ளனர்.

இரணைமாதா நகர் இறங்குதுறையில் நடைபெற்ற போராட்டத்தைத் தொடர்ந்து, பூநகரி பிரதேச சபைக்கு மனுவை ஒப்படைக்கச் சென்ற போதும் அங்கு எவரும் ஏற்கவில்லை. இதன் பின்னர் பூநகரி பிரதேச செயலகத்துக்குச் சென்று, திட்டமிடல் பணிப்பாளரிடம் மனுவைக் கையளித்தனர். மன்னார் சமூக மேம்பாட்டு அபிவிருத்தி நிறுவனம் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் இரணைதீவு மக்கள் ஆகியோர் இணைந்து இந்த மனுவைக் கையளித்துள்ளனர். (ஒ.6,22,113,214)

## ஜனாஸா....

இடம் என்று பேராதனைப் பல்கலைக்கழகம் பரிந்துரைத்துள்ளது.

எனவே அங்கு சடலங்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்று கோரி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மருதானை பள்ளிவாசலின் நிர்வாகத்தினர் அந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளனர்.

குப்பியாவத்தை மயானத்தில் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டால், அடக்கம் செய்யும்போது, சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படும். கிளிநொச்சி - இரணைதீவு பகுதியில் சடலங்களை அடக்கம் செய்வது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர். (சு-இ)

## அம்பிகைக்கு....

மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில், மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு முன்பாக போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதி வேண்டும் உட்பட 4 கோரிக்கைகளை முன்வைத்து லண்டனில், அம்பிகை செல்வகுமார் முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதேவேளை யாழ்ப்பாணம் நல்லூரிலும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (சு-இ)

## முஸ்லிம்களின்...

ளது. இதற்கே நாம் எதிர்ப்பு வெளியிடுகின்றோம். அரசு தனது தீர்மா னத்தை மீளப் பெறவேண்டும் இவ்வாறு இரணைதீவு பங்குத்தந்தை ம.பத்திநாதர் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரணைதீவு கத்தோலிக்கர்கள் செறிந்து வாழ்கின்ற, நீரால் சூழப்பட்ட கிராமம். சடலங்களை அடக்கம் செய்வதற்கு அரசு மேற்கொண்டிருக்கும் தீர்மானம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும். இரணைதீவிலிருந்து 1992ஆம் ஆண்டில் மக்கள் இடம்பெயர்ந்தார்கள். 2017ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டங்களைத் தொடர்ந்து, 2018ஆம் ஆண்டில் மீண்டும் குடியேறுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. இருப்பினும் அங்கு இன்னமும் ஒரு சுமுகமான நிலை ஏற்படவில்லை. இப்போது சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கு வசிக்கின்றன. அத்தோடு மாதமொரு முறை அங்கு திருப்பலி இடம்பெறுவதுடன் கடந்த 19ஆம் மற்றும் 20ஆம் திகதிகளில் இரணைதீவில் தவக்கால தியானம் ஆரம்பமாகியுள்ளது.

இவ்வாறிருக்கையில் கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை இரணைதீவில் அடக்கம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை பெரிதும் விசனமளிக்கிறது, என்றார். (ம-ஒ,இ)

## வவு. இளைஞர்கள்...

துள்ளது. சம்பவத்தில் சேமமடு பகுதியைச் சேர்ந்த பிரசாத், சயீவன் ஆகியோரே காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட மரம் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை அண்மையில் வவுனியாவில் மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் இடம்பெற்றிருந்தது. இதன்போதும் சட்டவிரோத மரக்கடத்தல் இடம்பெற்றது என்றும், மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோதே தாமும் திருப்பிச் சுட்டோம் என்றும் இராணுத்தினர் தெரிவித்திருந்த நிலையில், தம்மிடம் துப்பாக்கி இல்லை என்றும், இராணுவமே தம்மைச் சுட்டது என்றும் அந்தச் சம்பவத்தில் காயமடைந்த இளைஞர்கள் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-110)

## மைதானத்தை...

இடைநிறுத்தி, வேறொரு மைதானத்தைத் தெரிவு செய்தது மக்கள் பிரதிநிதிகள்தான். அதற்கான அனுமதி அமைச்சிடமிருந்து எனது கைக்குக் கிடைக்கவில்லை. ஆனாலும் அனுமதி பெறப்பட்டுள்ளது என மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அங்கஜன் எனக்குத் தெரிவித்தார்" இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

கிராமப்புற மைதானங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தை நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை காலை 10.25 மணிக்கு ஆரம்பிக்குமாறு விளையாட்டு உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சால் பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்துக்காக வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் நாமகள் விளையாட்டுக் கழகம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கான மதிப்பீடுகள் வலி. வடக்கு பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்தன. நிகழ்வுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பிரதேச சபைக்கு அமைச்சு அறிவுறுத்தியிருந்தது. வலி. வடக்கு பிரதேச சபை அதற்கமைவாக நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தது. அத்துடன் 10.25மணிக்கே நிகழ்வை மேற்கொள்ளுமாறும் 'ஸூம்' செயலி ஊடாக பிரதமர் பார்வையிடுவார் என்றும் கூறப்பட்டிருந்தது.

வலி. வடக்கு பிரதேச சபையால் கடந்த திங்கட்கிழமை இதற்கான அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் அன்றைய தினம் வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தனுக்கு, வலி. வடக்கு பிரதேச செயலரிடமிருந்து, நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என மாவட்டச் செயலர் மகேசன் அறிவித்துள்ளார் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன், மாவட்டச் செயலர் மகேசனுடன் தொடர்புகொண்டுள்ளார். நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்ற தகவலை மாவட்டச் செயலர் இதன்போது உறுதிப்படுத்தினார். அதனைக் கடிதம் மூலம் அறியத்தருமாறு பிரதேச சபைத் தவிசாளர் கோரியுள்ளார். இந்த அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நாமகள் விளையாட்டுக்கழக மைதான அபிவிருத்திப் பணிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது.

ஆனால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை, வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மாவைகலட்டியிலுள்ள உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் அபிவிருத்திப் பணிகளை ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் அங்கஜன் ஆரம்பித்து வைத்துள்ளார்.

'நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்துக்கே நாம் மதிப்பீடுகளை செய்து அனுப்பியுள்ளோம். உதயதாரகை விளையாட்டுக்கழகத்தை தெரிவு செய்தமை எமக்குத் தெரியாது. அனுமதியில்லாமலே அது மேற்கொள்ளப்பட்டுள்ளது' என்று வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், 'உதயனுக்குத்' தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்டச் செயலர் க.மகேசனை தொடர்புகொண்டு கேட்டபோது, "யாழ்ப்பாணத்தில் ஆரம்பத்தில் தெரிவுசெய்யப்பட்ட மைதானங்களில் இரண்டு அல்லது மூன்று மாற்றப்பட்டுள்ளன. அவை வெவ்வேறு காரணங்களுக்காக மாற்றப்பட்டுள்ளன. இந்த மாற்றங்களுக்கான அனுமதி அமைச்சிலிருந்து கிடைத் துள்ளது என, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் எனக்குத் தெரிவித்தார். இந்த மைதானங்களை மக்கள் பிரதிநிதிகளே தெரிவு செய்தனர். மாற்றங் களையும் அவர்கள்தான் செய்தார்கள்"என்றார். (ம-ஒ,5)

## மேலும்...

படுத்தப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடத்தில் நேற்று 255 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் எவருக்கும் தொற்றில்லை என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையில் நேற்று 126 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் மூவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இந்த மூவரில் ஒருவர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக் கொத்தணியுடன் தொடர்புடையவர். அவர் கடந்த வாரம்காரை நகரில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பி அங்கு சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதேநேரம் ஊர்காவற்றுறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-26)

## மூன்று

கிளிநொச்சி - வட்டக்கச்சிப் பகுதியில் குடும்பப் பெண்ணொருவர் தனது மூன்று பிள்ளைகளையும் அணைத்தபடி கிணற்றுக் குள் குதித்த நிலையில், ஒரு பிள்ளையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. தாயார் உயிருடன் மீட்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஏனைய இரு பிள்ளை களும் இறந்திருக்கக்கூடு மெனவும் அவர்களின் சடலங்கள் கிணற்றின் அடியி ல் தென்படுகின்றன என்றும் நேற்று நள்ளிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. மாணிக்கப்பிள்ளையார் கோவில் கிணற்றுக்குள் குதித்தே அந்தப் பெண் தற்கொலைக்கு முயன்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர் தனது மூன்று பிள்ளைகளையும் அணைத்தபடி கிணற்றுக் குள் குதித்திருக்கலாம் என்று பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் அறிந்த ஊரவர்கள் பெண்ணை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அவரின் இரண்டு வயது மகனான கிருபாகரன் டினோஜன் சடலமாக மீட்கப்பட்டார். கிருபாகரன் பிருத்திகா (வயது 8), கிருபாகரன் அக்சயா (வயது 5) ஆகிய இருவரையும் காணவில்லை. அவர்களைக் கடற்படையினரின் உதவியுடன் கிணற்றுக்குள் தேடும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. காணாமல்போன பிள்ளைகளின் காலணிகள் கிணற்றுக்கு அருகில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. தாயார் தம்முடன் தற்கொலைக்கு முயல்கின்றார் என்று தெரிந்து அவர்கள் இருவரும் தப்பியோடியிருக்கலாம் என்றும் அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். அவர்கள் கிணற்றுக்கு அருகில் உள்ள பகுதிகளிலும் தேடப்பட்டனர். ஏனைய குழந்தைகளுக்கு என்ன நடந்தது என்று பெண்ணிடம் விசாரணைகளை முன்னெடுத்த போதிலும் அவர் பதில் ஏதும் கூற மறுத்தார் என்றும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை நேற்று நள்ளிரவு கிடைத்த தகவலின்படி கிணற்றின் ஆழத்தில் குழந்தைகளின் சடலங்கள் மங்கலாகத் தெரிந்தன என்றும் சம்பவ இடத்துக்கு நீதிபதி வரும்வரை மீட்புப்பணி நிறுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-12,113,10)


அகவை 60 இல் தடம் பதிக்கும் ஆசிரியருக்குப்

பிறந்த நாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

செல்வி. பவானி செல்லத்துரை

(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர், கல்விமானி)



எமது வித்தியாலயத்தில் 2010.06.15 தொடக்கம் இன்று வரை ஆரம்பக்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பணி யாற்றிய ஆசான் செல்வி.பவானி செல்லத்துரை அவர்களிற்கு எமது இனிய 60 ஆவது பிறந்த நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர் இன்று தனது சேவையிலிருந்து ஓய்வுபெறுவதால் ஓய்வுக் காலத்தில் உடலுள ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுள் கொண்டு வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்க பல்லாண்டு! வாழ்க நலமுடன்

ஏழாலை மேற்கு சுன்னாகம்

ஆசிரியர் நலன்புரிச் சங்கம் யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை

## 2021 உயர்தர மாணவர்களுக்கு

# அநீதி நிகழாத வகையில் பரீட்சை நடத்த வேண்டும்

*கல்வி அமைச்சருக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அவசரக் கடிதம்*

**யாழ்ப்பாணம்,மார்ச் 4**

**கொரோனா தொற்றுக் காரணமாக பல்வேறு தடைகளுக்கு மத்தியில் கல்வியைத் தொடரும் 2021 க.பொ.த. உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கு அநீதி நிகழாத வகையில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் கல்வி அமைச்சர் ஜி எல் பீரிஸுக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

பல்வேறு தடைகளுக்கு மத்தியில் கல்வியைத் தொடரும், 2021 ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பரீட்சையில் முதல் மற்றும் இரண்டாவது முறையாக தோற்றும் மாணவர்கள் பல சிக்கல்களை எதிர் கொள்கிறார்கள். எனவே அது தொடர்பாக உடனடியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். கொரோனாத் தொற்று இலங்கையில் ஆரம்பித்த 2020 மார்ச் முதல் ஓகஸ்ட் வரை சுமார் ஆறு மாதங்கள் மற்றும் கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்பட்ட காலகட்டமான ஒக்ரோபர் 2020 முதல் மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. மேலும், 2020 உயர்தர பரீட்சை முடிவுகள் வெளிவரத் தாமதமானதால், அந்த முடிவுகளின்படி இரண்டாவது முறையாக பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்த்திருந்த மாணவர்களுக்கும் போதுமான கால அவகாசம் இல்லாமல் போனது. எனவே, மேலே குறிப்பிட்ட விடயங்களைக் கவனத்தில் கொண்டு, 2021 உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு அநீதியிழைக்கப்படாத வகையில் பரீட்சையை நடத்த கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது.(ஐ-159)



## இராஜாங்க அமைச்சராக ரொஷான் கடமையேற்பு

கொழும்பு,மார்ச் 4

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார். இராஜாங்க அமைச்சில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில், பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்னிலையில் அவர் கடமையேற்றார்.

நிகழ்வில் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச , பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ்.டீ.ஏ.பீ.பொரலெஸ்ஸ உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (க-இ)

## சட்டமா அதிபரிடம் 65 பிரதிகள் மட்டும்

கொழும்பு,மார்ச் 4

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் 65 பிரதிகள் மட்டுமே சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தேசிய பாதுகாப்புத் தொடர்பான சாட்சிகளின் முக்கியத் தன்மை காரணமாக 22 பிரதிகள் கையளிக்கப்படவில்லை என்று சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.(க-இ)

## சுற்றுலாத்துறையினருக்கு அடுத்த வாரம் தடுப்பூசி

கொழும்பு,மார்ச் 4

சுற்றுலாத்துறையில் கடமையாற்றுவோருக்கும் தடுப்பூசி செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையில் உள்ளவர்களுக்கு மூன்று பிரிவுகளாக வகுத்து, அடுத்த வாரம் முதல் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஹோட்டல் ஊழியர்களுக்கு முதல் கட்டமாகத் தடுப்பூசி செலுத்தப்படும்.

இவர்களைத் தவிர சுற்றுலாப் பயணிகள் பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள், வழிகாட்டிகள் உள்ளிட்டோருக்கும் தடுப்பூசி செலுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார். (க-இ)

## நாரங்கலகந்த மலைக்குத் தடை

பதுளை,மார்ச் 4

பதுளை நாரங்கலகந்த மலைப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மீள் அறிவித்தல் வரை தடை தொடரும் என்று பதுளை மாவட்டச் செயலாளர் தயா தமயந்தி பரணகம அறிவித்துள்ளார். சுற்றாடல் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னர், சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## கிழக்கில் விகாரை புனரமைப்பு: ரூபா 50 மில்லியன் வழங்கப்பட்டது

கொழும்பு,மார்ச் 4

ஜனாதிபதி மற்றும் பிரதமரால் அமைக்கப்பட்ட “தீகவாபிய அருண” நிதியத்துக்கு நன்கொடையாக 50 மில்லியன் ரூபாவுக்கான காசோலை நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. பௌத்தயா தொலைக்காட்சி பணிப்பாளர் குழுவால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் இந்தக் காசோலை கையளிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் மரபுரிமைகள் முகாமைத்துவத்துக்காக ஜனாதிபதி செயலணியின் முதல் மற்றும் முக்கிய, பாதுகாப்புப் பணியாக தீகவாபிய சைத்யவின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்காக ‘தீகவாபிய அருண’ நிதியம் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. (க-இ)

## நேர்முகத் தேர்வு மூலம் மட்டும் அதிபர் பதவிக்கு ஆள்சேர்ப்பு

கொழும்பு,மார்ச் 4

இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்று, தரம் இரண்டு மற்றும் மூன்றாம் தரங்களுக்கு 4 ஆயிரத்து 600 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றில் முதல் கட்டமாக மூன்றாம் தரத்துக்கான அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வுள்ளன. அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

போட்டிப் பரீட்சைக்குப் பதிலாக முறையான நேர்முகத் தேர்வை நடத்தி, மூன்றாம் தரத்துக்குத் தகுதியானவர்களை இணைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

**உடனடித் தேவை**
கொத்து, றைஸ் போடுவதில் அனுபவம் உள்ளவர் தேவை
தொடர்புகட்கு: 076 000 1695
077 844 3590

**காணி விற்பனை**
உரும்பிராய் பொக்கனை வீதியில் முருகன் கோவில் முன்பாக 6 பரப்புக் காணி விற்பனைக்கு. இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். பலாலி வீதியிலிருந்து 500 m தூரம். தரகர் தேவையில்லை.
தொடர்பு:
077 6234 204
077 505 8561

**பெண் வேலையாட்கள் தேவை**
கோழிப் பண்ணையிலும், கோழி இறைச்சிக் கடையிலும் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண்கள் தேவை
1kg புறொயிலர் - 350/-
தொடர்பு 077 271 8149, 07732 66732
Viber : 0041779243687

**வேலையாட்கள் தேவை**
சாவகச்சேரியில் இயங்கும் சுவி தளபாட விற்பனை நிலையத்திற்கு விற்பனைப் பிரதிநிதிகள் ஆண்கள் தேவை.
(சம்பளம்-50,000 - 60,000)
தொடர்பு:- 077 5293 087

**புதிய பொதிகள் சேவை**
வெளிநாடுகளுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் பொதிகளை அனுப்பிட,
11kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
Swiss - 1300/- Germany - 1200/- U.K - 1000/-
மற்றைய நாடுகளுக்கு விசேட சலுகைகள்
Thirumurugan com Net PVT Limited
321, K.K.S. Road, Jaffna. T.P 077 755 4528, 021 222 7835

**காணி விற்பனைக்கு**
யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
(நிலப்பரப்பு) (2பரப்பாகப் பிரிக்கப்பட்ட காணி 14 அடி பாதையுடன்) பருத்தித்துறை வீதியில் இருந்து 40m நடைதூரம்.
(தரகர் தேவையில்லை)
077 596 3845, 076 640 0974



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.